பக்கங்கள்:11

விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 18 சனிக்கிழமை 02.07.2022 கதிர் 239

இனி இது ரகசியம் அல்ல!

தூதுவர்கள், தூதரகங்களுடன் பழகும் அரசியல்வாதிகள், ஊடகவியலாளர்கள் மிகக் கவனமாக செயல்பட வேண்டும். நமது நம்பகத் தன்மையை நிரூபிப்பதில் – வெளிப்படுத்துவதில் – உறுதிப்படுத்துவதில் – எப்போதும் மிக மிகக் கவன 2

# இனவெறிச் செயற்பாடுகளினால்தான் கோட்டா அரசு மீது சர்வதேசம் கோபம்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 02

இனவாதத்தை எப்போதும் தமது பிழைப்புக்காகப் பயன்படுத்தும் குழுக்கள் நாட்டுக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்தி வருகின்றன. தற்போதைய அரசுடன் உலகின் பல நாடுகள் கோபமடைந்துள்ளமைக்கான காரணம் இனவாத, இனவெறிச் செயற்பாடுகளே ஆகும்.

– இவ்வாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். 2

## பொருளாதார நிபுணர்களுடன் ஜனாதிபதி நேற்றுக் கலந்தாய்வு

சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்கால நடைமுறைகள் மற்றும் இலங்கை எதிர்கொள்ளும் சவால்களை சமாளிப்பதற்கான வழிமுறைகள் குறித்து விரிவான கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ட்விட்டர் பதிவொன்றை மேற்கொண்டு ஜனாதிபதி இதனை குறிப்பிட்டுள்ளார்.

கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, பேராசிரியர் சாந்தா தேவராஜன் மற்றும் கலாநிதி ர்மினி குரே ஆகியோருடன் சூம் தொழிநுட்பம் மூலம் இந்த கலந்துரையாடல் இடம்பெற்றதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆள்கொணர்வு மனுக்களின் தீர்ப்பு மீளவும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை 02

இறுதி யுத்தத்தில் சரணடைந்து, பின் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பாக அனந்தி சசிதரன் உட்படடோரால் தாக்கல் செய்யப்பட்ட ஆள்கொணர்வு மனுக்கள் மீதான தீர்ப்பு எதிர்வரும் செப்டெம்பர் பதினைந்தாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட சட்டத்திரணி இரட்ணவேல் தெரிவித்தார்.

நேற்று வவுனியா மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தொடர்பான தீர்ப்பு வழங்கப்படவிருந்த நிலையில் மீண்டும் திகதி இடப்பட்டுள்ளது.

முன்னரும் இதே போன்று தீர்ப்பு வழங்கப்படவிருந்து அது நேற்றைய தினத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

## இந்த அரசை நம்பியிருக்காது நாங்களாவே செயற்படுவோம்

### மக்களிடம் கூல் வேண்டுகோள்




(இ.கலையமுதன்)

பொதுமக்கள் இனியும் அரசில் தங்கியிருக்காது – இந்த அரசை நம்பியிருக்காது – சுதந்திரமாகச் செயற்பட முன்வர வேண்டும்.

– இவ்வாறு இளைப்பாறிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2

## வலையிறவு ஆற்றில் நேற்று வீழ்ந்த கனரக வாகனம்



மட்டக்களப்பு – வவுணதீவு வலையிறவுப் பாலத்தருகில் கனரக வாகனம் ஒன்று வீதியைவிட்டு விலகி வலையிறவு ஆற்றில் வீழ்ந்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

அந்த வீதியால் சென்ற இரண்டு கனரக வாகனங்கள் ஒன்றை மற்றொன்று முந்திச் செல்ல முற்பட்ட போது இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

எனினும் வாகனத்தில் இருந்த சாரதியும் நடத்துனரும் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

## பலாலி விமான சேவையின் தாமதம் இந்தியாவாலாம்!

### குற்றம் சுமத்துகின்றார் டக்ளஸ்



பலாலிக்கும் இந்தியாவிற்கும் இடையிலான விமான சேவைகள் ஆரம்பிக்காததற்கு இந்தியாவே காரணம் என கடல்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டியுள்ளார்.

காக்கை 2

## ரெட்டா உள்ளிட்ட மூவர் பிணையில் விடுவிப்பு



கொழும்பில் அரசுக்கு எதிரான போராட்டத்தின்போது கலகம் விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த லஹிரு வீரசேகர, ரெட்டா எனப்படும் ரதிந்து 2

## மாணவரை ஏற்றிச் சென்ற லொறியின் 'பொடி' உடைந்ததில் 13 பேர் காயம்!









கலேன்பிதுனுவெவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் 13 பாடசாலை மாணவர்கள் படுகாயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து வசதிகள் இன்மையால் லொறியில் பாடசாலைக்கு சென்று கொண்டிருந்தபோது லொறியின் பின் பகுதி ('பொடி') இடிந்து விழுந்தமையால் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. 2

### '22' திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றி

## நேர்மையான சர்வகட்சி அரசை உடன் நியமிக்குக!

### கோட்டாவுக்கு மகாநாயக்க தேரர்கள் அவசரக் கடிதம்

இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக் கடியைக் கருத்தில்கொண்டு ஜனாதிபதி கோட்டாவுக்கு மகாநாயக்க தேரர்கள் அவசர கடிதம் ஒன்றை நேற்று அனுப்பியுள்ளனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்குதல், மக்களுக்கு நிவாரணம் வழங்குதல், அரசமைப்பின் 22 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுதல் மற்றும் நேர்மையான சர்வகட்சி அரசை உடனடியாக ஸ்தாபித்தல் உள்ளிட்ட 10 விடயங்கள் இந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## யானை தாக்கி சிப்பாய் சாவு

யானை தாக்கியதில் இராணுவ வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாதுரு ஓயா இராணுவப் பயிற்சி முகாமைச் சேர்ந்த 19 வயதுடைய இராணுவ வீரரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இராணுவ பயிற்சி குழுவொன்று பயிற்சியில் ஈடுபட்டிருந்த வேளையில் காட்டு யானை அந்த இராணுவ வீரரைத் தாக்கியுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மாக இருக்க வேண்டும். அப்போதுதான் மறு தரப்பார் தொடர்ந்தும் நம்பிக்கை வைத்துப் பழகுவர். நம்பகத்தன்மையற்ற அரசியல்வாதிகள் மற்றும் ஊடகவியலாளர்களுடான தொடர்புகளை – ஊடாட்டங்களை – ராஜதந்திர வட்டாரங்கள் வெட்டிவிடும். ஆகவே எப்போதும் அவதானம் தேவை.

கடந்த சில தினங்கள் யாழ்ப்பாணம் வந்து தங்கியிருந்த ஜப்பான் தூதுவருக்கும் இங்கு அப்படி ஒரு துரதிஷ்ட சம்பவம் நடந்திருக்கின்றது. தமது யாழ் வருகையின் முதல் நாளின் மாலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று தலைவர்களோடும் ஜப்பான் தூதுவர் இரவு விருந்துடன் சந்தித்துப் பேசினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தரப்பில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரே ஜப்பான் தூதுவரைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் மாவை சேனாதிராஜாவும் சித்தார்த்தனும் அங்கிருந்த பத்திரிகையாளர்கள் சிலருடன் உரையாடினார்.

அதன் பின்னர் இரண்டு நாள் கழித்து கொழும்பில் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் வெளியான செய்தி பலரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. கோட்டா அரசுக்கு உதவி செய்வதில்லை என்ற முடிவை ஜப்பான் எடுத்திருப்பதாக கூட்டமைப்பினரிடம் ஜப்பான் தூதுவர் கூறினார் என்று அச்செய்தி பிரசுரமாகி இருந்தது. கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார் என்றும் அந்த பத்திரிகை குறிப்பிட்டது.

இதையடுத்து இச்செய்தி பல மட்டங்களிலும் விமர்சனத்திற்கு உள்ளாகிய நிலையில் கொழும்பில் இருந்த ஜப்பான் தூதுவர் விழுந்தடித்துக் கொண்டு போய் ஜனாதிபதி கோட்டாபயவைச் சந்தித்து, தாம் அப்படி தமிழ் கூட்டமைப்பிடம் எதுவும் தெரிவிக்கவே இல்லை என்று ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்.

இதே சமயம் ஜப்பான் தூதரகமும் இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தி அறிக்கை ஒன்றை வெளியிட்டது

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் இவ்விடத்தை ஒட்டி மூன்று டுவிட் செய்திகளை வெளியிட்டு நிலைமையைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"கூட்டமைப்பின் மூன்று பங்காளி கட்சிகளின் தலைவர்களும் ஜப்பான் தூதுவரைச் சந்தித்துப் பேசினர் என்பது உண்மை. ஆனால் அவர்கள் யாரிடமும் இலங்கைக்கு ஜப்பான் உதவ மாட்டாது என்ற செய்தியை ஜப்பான் தூதுவர் தெரிவிக்கவே இல்லை. மாறாக, சர்வதேச நாணய நிதியத்தின் ஏற்பாடுகள், ஒழுங்குகள் சரி வந்த பின்னர் இலங்கைக்கு ஜப்பானும் சேர்ந்து உதவி அளிக்கும் என்றே அவர் கூறியிருந்தார். மூன்று கட்சிகளினதும் தலைவர்களும் அதனை உறுதிப்படுத்தினர். இவ்வளவு காலமும் இலங்கைக்கு ஜப்பான் உதவியதற்கு கூட்டமைப்பு தலைவர்கள் – குறிப்பாக தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராஜா – நன்றி தெரிவித்தார். இந்த இக்கட்டான சமயத்தில் நாட்டுக்குத் தொடர்ந்து உதவும்படி மூன்று கட்சிகளின் தலைவர்களும் கேட்டுக் கொண்டனர்" – என்ற சாரப்பட சுமந்திரனின் விளக்கம் அமைந்திருந்தது.

கூட்டத்தில் பங்கு பற்றிய பங்காளிக் கட்சித் தலைவர்கள் மூவருடனும் விரிவான உரையாடலை நடத்திய பின்னரே கூட்டமைப்புப் பேச்சாளர் என்ற முறையில் இந்த விளக்கத்தை சுமந்திரன் வெளியிட்டிருக்கின்றார்.

தாங்கள் அப்படிக் கூறவில்லை என்கின்றனர் கூட்டமைப்புத் தலைவர்கள். 'ஜப்பான் தூதுவரும் எங்களிடம் அப்படி கூறவே இல்லை. அவர் அப்படிக் கூறினார் என நாங்களும் பத்திரிகை, ஊடகங்களிடம் தெரிவிக்கவும் இல்லை' என்று கூறுகின்றனர்.

அப்படியானால் உண்மையில் என்ன நடந்தது? அவர்கள் பேசிய ஆங்கிலத்தில் ஏதும் குறைபாடு இருந்திருக்குமோ தெரியவில்லை.

ஆனால் இந்தச் செய்தி மேற்படி பத்திரிகையில் உடனடியாக வெளிவரவில்லை. முதலில் தூதுவர் கூட்டமைப்பினரைச் சந்தித்து முடிந்த கையோடு, தமிழ் இணையத்தளம் ஒன்று இந்தச் சாரப்பட – அதாவது கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருக்கும் வரை இலங்கை அரசுக்கு ஜப்பான் உதவாது என்று கூட்டமைப்பினரிடம் ஜப்பான் தூவர் சொன்னார் என்ற சாரத்தில் – ஒரு செய்தியை வெளியிட்டிருந்தது.

கூட்டமைப்பின் தலைவர் ஒருவர் அந்த செய்தியை – அல்லது அப்படி ஒரு செய்தியை அந்த இணையத்தளத்துக்குக் கூறியிருக்க கூடும் என்று வழமையான செய்தி மூல அடிப்படையில் ஊகிக்கப்பட்டது. அந்த இணையத் தளத்தின் செய்தியை நம்பி, தன் செய்தியாக மறுபிரசுரம் செய்து வாங்கி கட்டியிருக்கிறது கொழும்பு ஆங்கில நாடுகள் என்று நினைக்கிறேன்.

இரண்டாவது நாள் வேறு சில ஊடகப்பிரதானிகளுடன் ஜப்பான் தூதுவரை நானும் சந்தித்து உரையாடியிருந்தேன்.

அப்போதும் கூட ஜப்பான் இலங்கைக்கு உடனடியாக உதவாவிட்டாலும், சர்வதேச நாணய நிதியத்தின் தீர்மானத்திற்குக் காத்திருக்கிறோம், அது வந்ததும் அவர்களோடு சேர்ந்து நாங்களும் உதவி அளிப்போம் என்றுதான் அவர் எங்களிடமும் கூறி இருந்தார்.

யாரோ ஓர அரசியல்வாதி அல்லது ஊடகத் தரப்பின் குசும்பில் எழுந்த இச் செய்தி பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி விட்டது.

இத்தகைய செய்திகள் எழுதப்படும் போது அவை பிராந்திய, தேசிய மட்டத் தில் எழுப்பக்கூடிய அதிர்வலர்களை ஊகித்து, செய்திகளின் வலிமை தன்மையை ஊடகவியலாளர்கள் உறுதிப்படுத்திக் கொள்வது முக்கியம். sensational செய்திகள் என்று விடயத்தைத் திசை திருப்பி, புனை கதைகளைச் செய்திகளாக்கி, வாங்கிக் கட்டினால் நம்பகத்தன்மை குறைந்து விடும்.

★ ★ ★

யாழ் நகரிலே எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக சில இடங்களுக்கு வேறு வழியின்றி நடை பயில வேண்டியதாயிற்று. அப்படி நேற்று மதியம் போய்க் கொண்டிருக்கும் போது என்னை கடந்து சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று வழியில் என்னைக் கண்டதும் திரும்பி வந்து என் முன்னால் நின்றது. மோட்டார் சைக்கிளை செலுத்தியவரையோ பின்னால் இருந்தவரையோ அவர்கள் ஹெல்மெட் அணிந்திருந்தமையால் உடனடியாக என்னால் அடையாளம் காண முடியாமல் போய்விட்டது. ஆனால் குரலைக் கேட்டதும் ஆச்சரியப்பட்டு போனேன். மோட்டார் சைக்கிளை செலுத்தியபடி, சாவகாசமாக கே.கே.எஸ் வீதியில் சென்று கொண்டிருந்தவர் வேறு யாருமல்லர், ஜனாதிபதி சட்டத்தரணி, கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன்தான். பின்னால் அவரது மெய்ப்பாதுகாவலர் ஒருவர். இரண்டு நிமிடம் வீதியில் நின்று உரையாடிச் சென்றார். அநாயசமாக மோட்டார் சைக்கிள் ஓடிச் செல்கிறார். வயலில் அவர் டிராக்டர் உழுதமை போலல்லாமல், இது இயல்பாகவே இருந்தது. நாட்டின் நெருக்கடி நிலைமை ஜனாதிபதி சட்டத்தரணி வரை உணரப்பட் டிருப்பதில் கொஞ்சம் சந்தோஷம். ஆறுதல்.

கொழும்பிலிருந்து எப்படி வந்தார் என்று கேட்டேன். பஸ்ஸில்தான் பயணம் என்றார் அவர்.

நாடாளுமன்றத்துக்கு போவதற்கு எரிபொருள் இல்லை என்பது பல எம்.பி. மாரின் முறையீடாக இருக்கின்றது. அதில் சுமந்திரனும் ஒருவர்தான்.

– மின்னல் –

## இனவெறிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலவும் நெருக்கடி மிக்க நிலைமையிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்துள்ள அரசியல் கட்சிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றார். அதன் மூன்றாம் கட்டம் நேற்றுக் கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய காங்கிரஸ், ஜனநாயக மக்கள் காங்கிரஸ், புதிய ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி அதன் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நான் வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சராகச் செயற்பட்டபோது , கட்டார் நிதியத்தின் கிளையொன்றை இலங்கையில் திறப்பதற்கு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அந்த அழைப்பை ஏற்று அதனைத் திறப்பதில் நான் கலந்துகொண்டேன். அன்று அதனை இலக்காகக் கொண்டு எனக்கு எதிராகப் பாரதூரமான விமர்சனங்கள் முன்னெடுக்கப்பட்டன.

இனவாதத்தைத் தூண்டி முன்னெடுக்கப்பட்ட பிரசாரத்தின் ஊடாக சமூகத்தினுள் தவறான புரிதலை ஏற்படுத்துவதற்குச் சில தரப்பினர் செயற்பட்டனர். குறுகிய இனவாத நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டார் போன்ற நாடுகளை அவர்கள் ஆத்திரமடையச் செய்தனர்.

இவ்வாறு அன்று போராட்டம் நடத்திய குழுவினர் இன்று அந்நாட்டுக்கு எரிபொருளைப் பெறுவதற்காகச் சென்றுள்ளனர். அன்று மோசமாகச் சித்திரிக்கப்பட்ட கட்டார், இன்று எவ்வாறு சிறந்த நாடாக மாறியது?

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக இந்தச் சந்தர்ப்பத்தில் மிக விரைவாகச் செய்ய வேண்டியது தரப்படுத்தல்களில் இலங்கையை முன்னேற்றுவதற்காகப் பொருளாதார மாறுபாடுகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண் டும்.

அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று அறிந்து கொள்ளும் எந்தவொரு நாடும், முதலில் செய்தது சர்வதேசத்துடன் முறையானதொரு கொடுக்கல் – வாங்கலை ஏற்படுத்திக் கொண்டமையாகும். எமது நாடு செய்தது அதற்கு முரணான செயற்பாட்டையே ஆகும்.

எந்தவொரு நாட்டுக்கும் சர்வதேசத்தால் தட்டில் வைத்து நிவாரணம் வழங்கப்பட மாட்டாது. அதற்கு முறையான, வெளிப்படையான வேலைத்திட்டம் தேவை – என்றார்.

## இந்த அரசை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுப்பினரும் பேராசிரியருமான ரத்ன ஜீவன் கூல் தெரிவித்தார்

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலை தொடர்பில் நேற்று யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் தற்போது பொருளாதார நெருக்கடி தலைதூக்கியுள்ளது. இதன் காரணமாக அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் அனைத்தையும் அரசிடமிருந்து எதிர்பார்க்காது – அரசை இனியும் நம்பியிருக்காது வெளியில் சுதந்திரமாக எமது அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்

குறிப்பாக மின்சாரத்தை எதிர்பார்க்காது கிணற்றில் வாளியில் அள்ளிக் குளிக்க வேண்டும். அதேபோல் எரிபொருளை எதிர்பார்க்காது நாங்கள் முன்னர் ஒரு காலத்தில் எவ்வாறு பயணம் செய்தோமோ அதேபோல் சைக்கிள்களைப் பாவித்து எமது பயணங்களை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், இதைவிடுத்து இன்றும் அரசை எதிர்பார்த்திருக்கின்றோம்; அரசை நம்பியிருக்கின்றோம். அவ்வாறான நிலையை இனியும் எதிர்பார்க்க முடியாது.

குறிப்பாகச் சமுர்த்தி என்ற ஒரு விடயத்தைப் பார்ப்போமாக இருந்தால் சமுர்த்தி அனைவருக்கும் வேண்டும் எனக் கோரி வருகின்றோம். சாதாரண குறைந்த வருமானம் உள்ளவர்களுக்குச் சமுர்த்தி வழங்கப்படுகின்றது. ஆனால், ஒரு கடையின் முதலாளியாக உள்ளவர் தனக்கும் சமுர்த்தி வேண்டும் எனக் கேட்கின்றார்.

எனவே, இந்தநிலையில் மாற்றம் ஏற்பட வேண்டும். அவ்வாறு மாற்றம் ஏற்படாதவிடத்தில் நாம் இன்னும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை வரும் – என்றார்.

## மாணவரை ஏற்றிச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இதன்போது லொறியில் 37 மாணவர்கள் பயணித்துள்ளனர். அவர்களில் 13 பேர் காயமடைந்துள்ளனர்.

பிரதேசவாசிகள் காயமடைந்த மாணவர்களை கலேன்பிதுனுவெவ வைத்தியசாலையில் அனுமதித்தனர். மூன்று மாணவர்கள் மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்தின்போது மாணவர் ஒருவரின் கால் பலத்த சேதமடைந்துள்ளதாக கலேன்பிதுனுவெவ வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் விசாரணையின் போது தெரிவித்தார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேன்பிதுனுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரெட்டா உள்ளிட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சேனாரத்ன மற்றும் ரத்கரவ்வே ஜினரதன தேரர் ஆகியோர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களை 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்குமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டார்.

ஜூன் 09 மற்றும் 10 ஆம் திகதிகளில் தலங்கம மற்றும் கோட்டை பிரதேசங்களில் இடம்பெற்ற போராட்டங்களின் போது ஒழுங்கீனமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டின் பேரில் குறித்த சந்தேக நபர்களைக் கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் கடந்த 22 ஆம் திகதி மருதானை பொலிஸிடம் அவர்கள் சரணடைந்தனர்.

பின்னர் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டதன் பின்னர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

## பலாலி விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தீவில் புதிதாக அமைக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு நேற்றைய தினம் அடிக்கல் நாட்டி வைத்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்தியாவில் எரிபொருள் பிரச்சினை ஏற்பட்டிருக்கின்றது. விமானங்கள் இங்கு வந்துவிட்டு திரும்பி செல்வதற்கு எரிபொருள் இல்லை. அத்துடன் இந்தியாவில் இருக்கக்கூடிய சில சட்டச் சிக்கல்கள் காரணமாகவும் இந்த காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்த விமான சேவைக்கு இலங்கை அரசு தனது பூரணமான ஒத்துழைப்பையும் அங்கீகாரத்தையும் வழங்குகிறது.

இந்த சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்பட்டு இந்த விமான சேவைகள் தொடரும் – என்றார்.



# இலங்கைக்கு மருத்துவப் பொருள்களை மலேசிய பௌத்த அமைப்புகள் வழங்கின



இலங்கையில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய, மலேசியாவிலுள்ள பல பௌத்த அமைப்புகள் இலங்கைக்கு அவசர மருந்து மற்றும் மருத்துவப் பொருள்களை நன்கொடையாக வழங்கியுள்ளன.

ஜூன் மாதம் 14 ஆம் திகதி அன்று சி ஹுய் டாங் – கோலாலம்பூரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கரீன் கியோங், மலேசியாவின் யயாசன் சின் செவ் ரூ பெஸ்ட் விஷ்ஸ் அறக்கட்டளையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சியூ நியோக் சோ மற்றும் பி.எல்.ஐ.ஏ. ரூ.போ.குவாங் ஷான் மலேசியாவின் தலைமை மடாதிபதி வென் ஜ் செங் ஆகியோர் 54046.26 அமெரிக்க டொலர்கள் பெறுமதியான மருந்துவப் பொருள்களை மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் எயார் சீப் மார்ஷல் சுமங்கல டயஸிடம் கையளித்தனர்.

இந்தப் பொருள்கள் கடந்த 20 ஆம் திகதி கோலாலம்பூரிலிருந்து இலங்கைகு அனுப்பப்பட்டது.

இந்தக் கையளிக்கும் நிகழ்வில் பிரதி உயர்ஸ்தானிகர் திருமதி டிலானி வீரகோன் மற்றும் இரண்டாம் செயலாளர் (வர்த்தகம்) செல்வி மேகலா அபேகோன்ஆகியோரும்கலந்துகொண்டமைகுறிப்பிடத்தக்கது.

# சாதாரணதர பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தம்

நாட்டில் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கா.பொ.த. சாதாரண பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் எல்.எம்.டி. தர்மசேன தெரிவிக்கையில் –

எரிபொருள் நெருக்கடி நிலைமை காரணமாக க.பொ.த சாதாரண தரப் பரீட்சையின் இரண்டாம் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

முதற் கட்ட விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன. எனினும் பல்வேறு சவால்களுக்கு மத்தியிலேயே விடைத்தாள் மதிப்பீட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் 2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் செயன்முறை பரீட்சைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. மேற்படி பரீட்சைகள் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

க.பொ.த. உயர்தர பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதியில் அல்லது ஓகஸ்ட் முதல் இரு வாரங்களுக்குள் வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. – என்றார்.

# 200 ஆடைத் தொழிற்சாலைகள் செயல் இழக்கும் நிலை; ஆடை உற்பத்தி வாய்ப்புகள் பிற நாடுகளுக்கு செல்லலாம்!

எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் மின்வெட்டு காரணமாக சுமார் 200 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான ஆடைத் தொழிற்சாலைகள் செயல் இழக்கும் நிலையில் உள்ளன.

மேலும், வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு கிடைக்கும் ஆடை உற்பத்தி வாய்ப்புகள் வேறு நாடுகளுக்குச் செல்லும் அபாய நிலை தோன்றியுள்ளதாக ஒன்றிணைந்த ஆடைத் தொழிற்சாலைகள் மன்றம் தெரிவிக்கிறது.

பெரும்பாலான பாரிய ஆடைத் தொழிற்சாலைகள், சிபெட்கோ மற்றும் ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டொலர்களை செலுத்தி எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தாலும், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றன என ஒன்றிணைந்த ஆடைத்தொழிற்சாலைகள் மன்றத்தின் உப தலைவர் பீலிக்ஸ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகளுக்கு பல சமயங்களில் போதியளவு எரிபொருள் கிடைக்காததன் காரணமாக, பாரிய ஆடைத் தொழிற்சாலைகளுக்கும் மறைமுக தாக்கத்தை செலுத்துகின்றன.

ஏனெனில் பெரிய அளவிலான ஆடைத் தொழிற்சாலைகள் தங்களது ஆடை உற்பத்திகளில் ஒரு தொகுதியை சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகளுக்கு உற்பத்திக்காக வழங்குகின்றன.

இதனால், சிறிய மற்றும் நடுத்தர ஆடைத் தொழிற்சாலைகள் நேரத்துக்கு உற்பத்திகளை கையளிக்க முடியாமல் போகும் பட்சத்தில் அவை பாரிய ஆடைத் தொழிற்சாலைகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் உற்பத்தி வாய்ப்புக்கள் வேறு நாடுகளுக்கு திரும்பும் அபாயம் காணப்படுகின்றது. அவற்றைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. – என்றார்.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆடை தொழிற்சாலைகளின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள்தங்களதுவாகனங்களில்வேலைத்தளங்களுக்கு வருவதற்கு முடியாதுள்ளனர்.

இதனால், ஆடைத் தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையை கருத்தில் கொண்டு, தங்களது ஊழியர்களின் போக்குவரத்துக்கு, எரிபொருள் ஒதுக்கீட்டை வழங்குமாறு சிபெட்கோ நிறுவனத்திடம் ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் விசேட கோரிக்கை யொன்றை முன் வைத்துள்ளனர்.

மின்சாரம் துண்டிக்கப்படுவதால் ஜெனரேட்டர்களை இயக்குவதற்கு எரிபொருளை பெற வேண்டியுள்ளதால், நிறுவனங்கள் மேலதிக செலவீனங்களைச் சுமக்க வேண்டியுள்ளது.

இந்நிலைமையால் நிறுவனங்களின் வருமானம் மோசமாக பாதித்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# ஜூனில் 54.6 சதவீதமாக பணவீக்கம் உயர்ந்தது

கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மதிப்பிடப்படும் பணவீக்கம் கடந்த ஜூன் மாதம் 54.6 சதவீதமாகக் கணிசமானஅளவினால் உயர்வடைந்திருக்கின்றது.

இந்தப் பணவீக்கம் கடந்த மேமாதத்தில் 39.1 சதவீதமாகப் பதிவாகியிருந்த நிலையில், அது ஜூன் மாதம் 15.5 சதவீத அதிகரிப்பைக் காண்பித்திருக்கின்றது.

கடந்த ஒருமாத காலத்தில் மரக்கறிகள், உடன்மீன், பாண், அரிசி உள்ளிட்ட உணவுப்பொருள்கள் மற்றும் போக்குவரத்து, நீர், மின்சக்தி, எரிவாயுக் கட்டணங்கள் போன்ற உணவல்லாப்பொருள்கள், சேவைகளின் விலைகள், கட்டணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இந்தப் பணவீக்க உயர்விற்குப் பிரதான காரணமாக அமைந்திருப்பதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நாடுபாரியபொருளாதாரநெருக்கடிக்குமுகங்கொடுத்திருக்கும் நிலையில், இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியின் தொடர்ச்சியாக பணவீக்கம் மிகவேகமாக அதிகரித்துச்செல்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் மதிப்பீட்டின் பிரகாரம் பணவீக்கம் கடந்த மே மாதத்துடன் ஒப்பிடுகையில் ஜூன் மாதம் சடுதியான அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. இந்தப் பணவீக்கம் பெரும்பாலும் வழங்கலுடன் (பொருள்கள், சேவைகள் விநியோகம்) தொடர்புடைய காரணிகளாலேயே தூண்டப்பட்டிருப்பதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

குறிப்பாக உணவு மற்றும் உணவல்லாப்பொருள்களின் மாதாந்த விலையதிகரிப்பு பணவீக்கம் உயர்வடைவதற்கான முக்கிய காரணமாக அமைந்திருப்பதாகச் சுட்டிக்காட்டியுள்ள மத்திய வங்கி, கடந்த மேமாதம் 57.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த உணவுப்பணவீக்கம் ஜூன் மாதத்தில் 80.1 சதவீதமாக அதிகரித்திருப்பதாகவும், மேயில் 30.6 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் ஜூனில் 42.4 சதவீதமாக உயர்வடைந்ததாகவும் தெரிவித்துள்ளது.

உடன்மீன், மரக்கறிகள், பாண், அரிசி, பால்மா உள்ளிட்ட உணவுப்பொருள்களின் விலைகளில் கடந்த மாதம் கணிசமானஅளவிலான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டதாகவும், உணவல்லாப்பொருள்களைப் பொறுத்தமட்டில் போக்குவரத்து, உணவகம், விடுதிகள், கல்விக்கான பிரத்தியேக வகுப்புக்கள், வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு ஆகியவற்றின் விலைகள் மற்றும் கட்டணங்கள் உயர்வடைந்தன எனவும் மத்திய வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை உணவு மற்றும் உணவல்லாப்பொருள்களின் விலைகளைப் பொறுத்தமட்டில், அவற்றில் முறையே 6.81 சதவீதம் மற்றும் 5.99 சதவீதம் என்ற அடிப்படையில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணின் மாதாந்த மாற்றம் கடந்த ஜூனில் 12.80 சதவீதமாகப் பதிவாகியது.

இந்தக் கணிப்பீட்டின்படி பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தைப் பிரதிபலிக்கின்ற மையப்பணவீக்கம் கடந்த மேமாதம் 28.4 சதவீதமாகப் பதிவாகியிருந்த போதிலும், அது ஜூன்மாதம் 39.9 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. அதேவேளை மேமாதம் 10.2 சதவீதமாகப் பதிவான ஆண்டுக்கான சராசரி பணவீக்கம் ஜூனில் 13.3 சதவீதமாக உயர்டைந்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே, ஜூன் ஆகிய கடந்த 6 மாதகாலப் பகுதியில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெணுக்கு அமைவாகக் கணிப்பிடப்பட்ட பணவீக்கமானது முறையே 14.2, 15.1, 18.7, 29.8, 39.1, 54.6 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

இதனை அடிப்படையாகக்கொண்டு நோக்குகையில் இவ்வருடத்தின் முதலாம் காலாண்டில் மிதமான அதிகரிப்பைக் காண்பித்த பணவீக்கம், இரண்டாம் காலாண்டில் மிகவும் சடுதியான அதிகரிப்பை – குறிப்பாக மாதாந்தம் 10 சதவீத உயர்வை காண்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 2022 / 2023 ஆம் ஆண்டிற்கான பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக பிற்போடப்பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.**

**அடுத்த கூட்டத்திற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.**

**அதிபர்,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.**

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அற்பத்தனமான அரசியல்வாதிகள்

**நாடு இத்துணை மோசமான நிலைக்கு – நெருக்கடிக்கு – வந்த பின்னரும் கூட, பொது நலனில் அக்கறைப்பட்டு, அதற்கு முன்னுரிமை கொடுத்து, நியாயத்தின்படி செயற்படும் மனச்சாட்சி நம்நாட்டு அரசியல்வாதிகளுக்கு வரவேயில்லை என்பதுதான் இந்த வேதனையிலும் மனதைக் குடையும் சோகமாக இருக்கின்றது.**

**கோட்டா ஆட்சியின் முட்டாள்தனம், அந்த ஆட்சிப் பீடத்துடன் ஒட்டியிருக்கும் ஒவ்வொருவருக்கும் நன்கு தெரியும். இது விடயத்தில் மக்களின் பொதுவான மனநிலை – சீற்றம் – ஆக்ரோஷம் – போன்றவை கூட கோட்டா தரப்புடன் – ராஜபக்ஷ அணியுடன் – கூட்டுக் சேர்ந்திருக்கும் தரப்புகளுக்கு நன்கு விளங்கும்.**

**அப்படியிருந்தும், பதவிக்காவும், பவிசுக்காகவும், நாட்டையே சுத்திச் சூறையாடி ஏப்பமிடும் தொகையில் பங்கு பெறவும் ஓர் எச்சில் கூட்டம் இன்னமும் அங்கு ஒட்டிக் கொண்டுதான் நிற்கின்றது.**

**கரித்துக் கொட்டும் நாட்டு மக்களின் சாபத்துக்கு மத்தியில்தான் இப்படி ராஜபக்ஷக்களுக்கு முதுகு கொடுத்து, வரலாற்றுத் தவறிழைத்துக் கொண்டு இருக்கின்றார்கள் இந்த மூன்றாம் தர அரசியல்வாதிகள்.**

**நாட்டு மக்களின் கருத்தியலைப் புரிந்து கொண்டு, இதற்கு முன்னர் வரை ராஜபக்ஷக்களுக்கு முண்டு கொடுத்த விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில்ல மற்றும் சுதந்திரக் கட்சியினர் போன்றவர்கள் கூட குரூர கோட்டா அணியை விட்டு வெளியேறி விட்டனர்.**

**ஆனாலும், இன்னும் நாடாளுமன்றத்தில் அரைவாசிப் பேர் ராஜபக்ஷ அரசுக்குக் காவடி தூக்குவதன் மூலம், அவர்கள் எலும்புத் துண்டாய் எறியும் அற்ப சலுகைகளுக்குக் காத்துக் கிடக்கின்றார்கள்.**

**மக்களின் எழுச்சியைக் கண்டு பயந்து 19ஆவது திருத்த ஏற்பாடுகளை மீளக் கொண்டு வருவோம் என்று உறுதியளித்த ராஜபக்ஷக்கள் இப்போது மக்கள் காதில் பூச்சுற்றுவது போல, 22ஆவது திருத்த வரைவை பிரேரித்திருக்கின்றார்கள்.**


**மக்களை ஏமாற்றும் விதத்தில் – முட்டாள்களாக்கும் வகையில் – இந்த அரசமைப்புத் திருத்த வரைவை நாம் முன்வைத்தாலும், நமக்கு காவடி தூக்கும் நமது எம்.பிக்கள் மக்களைப் பற்றிக் கவலைப்படாமல், எம் மீதான விசுவாசத்தில் அதை நிறைவேற்றித் தருவார்கள் என்ற முழு நம்பிக்கையில்தான் ராஜபக்ஷக்கள் இந்த வரைவை முன்வைத்திருக்கின்றார்கள் என்பது திண்ணம்.**

**இது போன்ற ராஜபக்ஷக்களில் அரசியல் அடிவருடிதனங்களுக்குத் துணை போகும் ஆளுங் கட்சியினர், அதே சமயம் தமது இத்தகைய குளறுபடித்தனங்களினால் மக்களுக்கு ஏற்படக் கூடிய சீற்றத்தின் விசாலத்தையும் புரிந்து கொண்டிருக்கின்றார்கள். அதனால்தான் நாடாளுமன்ற இணையத் தளத்தில் இருக்கும் தங்களது இல்ல விலாசங்களை அகற்றும்படி கோரி அவற்றை அகற்றச் செய்திருக்கின்றார்கள்.**

**மக்களின் கோபத்தின் மூர்க்கத்தைப் புரிந்து கொண்டுள்ள போதும், மக்களை மூர்க்கமடைய வைக்கும் அற்பத்தனமான அரசியலைத்தான் அவர்கள் தொடர்ந்தும் செய்கின்றார்கள். மக்கள் கருத்தியலைக் கணக்கெடுக்காத மூன்றாம் தர அரசியல்வாதிகள் நமது நாட்டில் தப்பிப் பிழைத்து அரசியல் செய்வதால்தான் ராஜபக்ஷக்கள் போன்ற அரசியல் பிழைத்த தலைவர்கள் தொடர்ந்தும் கோலோச்ச முடிகின்றது.**

# புலம்பெயர் தமிழர்களாலேயே நாட்டுக்கு விடிவு கிடைக்கும்!

### நோர்வேயில் வைத்து தெரிவித்தார் சாணக்கியன்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் வெட்கமில்லை, இன்றும் பதவியில் உள்ளார்கள். இலங்கையின் தற்போதைய நிலைமை வேதனைக்குரியதாகவுள்ளது. இலங்கையர்களின் வாழ்க்கை தரத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் மேம்படுத்த முடியும்.

ஜனாதிபதி உட்பட பிரதமர் பதவி விலக வேண்டும். இல்லாவிடின் தமிழர்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்க வேண்டும். பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வையே கோருகிறோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் ஒஸ்லோவில் உள்ள இலங்கையர்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

பல்வேறு கால கட்டங்களில் இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த அல்லது வெளியேற்றப்பட்ட புலம்பெயர் இலங்கையர்களை நோர்வேயில் சந்திக்கிறேன்.

கடந்த இருவாரங்களில் சுவிற்ஸர்லாந்தில் லீடிங் வித் பாஸ் என்ற தலைப்பில் கடந்த காலங்களை எவ்வாறு முகம் கொடுப்பது, யுத்த காலத்திலும் அதற்கு பின்னரான காலப் பகுதியிலும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நாடு என்ற ரீதியில் எவ்வாறு முகம் கொடுப்பது.

இதிலிருந்து எவ்வாறு வெளியேவருவது, முன்னேறி செல்வது தொடர்பில் அவதானம் செலுத்த சுவிற்ஸர்லாந்து நகரில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டேன்.

சுவிற்ஸர்லாந்துக்கு அண்மைய நாடாக நோர்வே உள்ளதால் இங்கு வந்துள்ளேன். வருகை தந்துள்ள அனைவருக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விசேடமாக தற்போது இலங்கை மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. அதிகாரிகளும் பொது மக்களும், பொலிஸாரும் இராணுவத்தினரும் ஒருவருக்கொருவர் முரண்பட்டுக்கொள்கிறார்கள்.

ஊழல் மோசடி, இலஞ்சம் ஆகியவை தற்போதைய நிலைமைக்குக் காரணம் எனக் குறிப்பிடுகிறார்கள். இல்லை நாட்டில் தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு வழங்காமலிருப்பது தற்போதைய பிரச்சினைக்கு பிரதான காரணியாக உள்ளது.

1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் இருந்து தமிழ், முஸ்லிம, சிங்களம் என இலங்கையர்கள் வேறுபடுத்தப்பட்டதால் தற்போதைய பிரச்சினை தீவிரமடைந்துள்ளது.

இலங்கையில் தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தால் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவித்தார்கள். அதனைத் தொடர்ந்து 30 வருடகால சிவில் யுத்தம் தோற்றம் பெற்றது. கடன் பெற்று யுத்தத்துக்கு அதிக நிதி செலவிடப்பட்டது. 2009 ஆம் ஆண்டு காலத்துக்குப் பிறகு பாதுகாப்பு அமைச்சுக்கு அதிக நிதி செலவிடப்பட்டுள்ளது.

துரதிஷ்டவசமாக கோ ஹோம் கோட்டா, நோ டீல் கம என குறிப்பிட நேரிட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வெட்கமில்லை, இன்றும் பதவியில் இருக்கிறார்கள்.

73 வருடகால தீர்க்கப்படாத தமிழர்களின் உரிமைசார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கினால் உலகளாவிய ரீதியில் உள்ள 13 லட்சம் புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்வார்கள்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும், பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு வழங்கினால் 13 லட்சம் புலம் பெயர் தமிழர்களின் முதலீடுகளை மேற்கொள்ள தயாராகவுள்ளனர். இலங்கையின் தற்போதைய நிலைமை கவலைக்குரியது.

இலங்கையர்கள் பாரிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளமையை காண்கையில் வேதனையடைகிறோம். ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு மக்களின் நிலை தொடர்பில் அக்கறையில்லை.

இலங்கை மக்களின் வாழ்க்கையை மேம்படுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் முடியும். இலங்கை பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டால் அதன் தாக்கம் வடக்கு மற்றும் கிழக்கு மக்களையும் செல்வாக்கு செலுத்தும்.

ஜனாதிபதி, பிரதமர் பதவி விலக வேண்டும். பதவி விலகாவிடின் குறைந்தபட்சம் தமிழர்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளை பெற்றுக்கொள்ள வேண்டும். பிளவுபடாத இலங்கைக்குள் தீர்வையே கோருகிறோம். – எனக் குறிப்பிட்டுள்ளார்.




# வவுனியா தாதியர் கல்லூரியும் தற்காலிகமாக மூடப்படுகிறது!

### எரிபொருள் நெருக்கடி காரணமாக

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக வவுனியா தாதியர் கல்லூரியை தற்காலிகமாக மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மேற்படி கல்லூரி நேற்று முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆசிரியர்கள் பணிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் எரிவாயு பற்றாக்குறை காரணமாக சமையல் செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

அத்துடன், பகல் வேளையில் மின்சாரம் தடைப்படுவதால் மருத்துவ நடவடிக்கைகள் மற்றும் கற்பித்தல் நடைமுறை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ளன என கல்லூரி நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

# அடுத்த ஆண்டில் ஜி-20 உச்சி மாநாட்டை நடத்துவதற்குத் தயாராகின்றது இந்தியா

**புதுடில்லியில் உள்ள பிரகதி மைதானத்தில் உள்ள மாநாட்டு வளாகத்தில் பெரும்பாலும் ஜி – 20 உச்சிமாநாடு இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.**



இந்தியா ஜி-20 உச்சிமாநாட்டை டெல்லியில் நடத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

அதே நேரத்தில், டிசம்பர் 2022 மற்றும் நவம்பர் 2023 க்கு இடையில், இந்தியாவின் ஜி-20 தலைவர் பதவிக்காலத்தின் போது, சுமார் நூறு 'ஆயத்த' கூட்டங்களை நடத்துவதற்குப் பொருத்தமான இடங்களைப் பரிந்துரைக்குமாறு ஜம்மு மற்றும் காஷ்மீர் மற்றும் வடகிழக்கு மாநிலங்கள் உட்பட பல மாநிலங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன எனப் பல மத்திய அமைச்சகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

'உச்சிமாநாடு இடம்'பற்றி இன்னும் முறையான அறிவிப்பு வெளியிடப்படவில்லை. என்றாலும், அமெரிக்கா, ரஷ்யா, சீனா, பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் பிற முக்கிய நாடுகளின் தலைவர்கள் மற்றும் உலகளாவிய பொருளாதார பிரமுகர்கள் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படும் இந்த ஜி-20 உச்சிமாநாட்டை புதுடில்லியின் பிரகதி மைதான வளாகத்தில் அரசாங்கம் நடத்த வாய்ப்புள்ளது.

மாநாட்டு அரங்குகள் மற்றும் 20 நாட்டுத் தலைவர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் தங்குவதற்கான புதிய ஹோட்டல்களுக்கான கட்டுமானம் ஏற்கனவே நடந்து வருகிறது.

அதே நேரத்தில், பிரகதி மைதானத்தின் தலைமையகத்தைமற்றமுக்கியஇடங்களுடன்இணைப்பதற்கான – ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபா செலவிலான –ஒருங்கிணைந்த போக்குவரத்து வழித்தடத் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி இந்த மாதம் தொடங்கி வைத்தார் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், நவம்பர் 2023 இலேயே நடைபெறவிருக்கும் உச்சிமாநாட்டிற்கு முன்னதாக இப்போதே நிகழ்வுகள் மற்றும் இடங்கள் பற்றிய காலெண்டரைப் பற்றி விவாதிப்பது முற்கூட்டிய நடவடிக்கையாகும் என்று தெரிவித்து முறையான அறிக்கையை வெளியிட அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

இந்த உச்சிமாநாட்டை ஜம்மு-காஷ்மீரில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஊடகங்களில் வெளியான செய்திகள் குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில் இந்த விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்சிமாநாட்டை ஜம்மு – காஷ்மீரில் நடத்துவது தொடர்பில், கடந்த வாரம் புதனன்று ஒரு வலுவான எதிர்ப்பை வெளியிட்ட பாகிஸ்தான், ஜி20 உறுப்பு நாடுகளில் உள்ள வெளியுறவு அமைச்சகங்களுக்கு முறையான ஆட்சேபக் குறிப்புகளை அனுப்பியது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சர்ச்சைக்குரிய பிரதேசம் என்று விவரிக்கப்படும் இடத்தில் நடக்கும் அத்தகைய கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்று இஸ்லாமாபாத் கேட்டுக் கொண்டது.

ஜி20 மாநாட்டுத் திட்டமிடலில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள், பல மாநில அரசாங்கங்களைத் தொடர்பு கொண்டு, உச்சிமாநாட்டிற்கு முந்தைய கூட்டங்களை அவற்றின் தலைநகரங்கள் மற்றும் முக்கிய சுற்றுலா இடங்களில் நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விசாரித்தனர் என்பது உறுதிப்படுத்தப்பட்ட து. எனினும், இதுவரை எந்த இடமும் இறுதி செய்யப்படவில்லை.

ஜி- 20 மாநாட்டின் ஆயத்த கூட்டங்களை 'பான் இந்தியா' அடிப்படையில் நடத்துவதே யோசனை. மேலும் அது குறித்து மாநில அரசுகளுடன் கலந்தாலோசனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம் என்று மூத்த அதிகாரி ஒருவர் கடந்த வாரம் கூறினார். அவர்களால் அடையாளம் காணப்பட்ட ஒவ்வொரு இடத்திலும் தங்குமிடம் மற்றும் இணைப்பு மற்றும் கிடைக்கும் பிற வசதிகளின் அடிப்படையில் அந்த இடம் குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தலைமையில் வெளியுறவுச் செயலர் வினய் குவாத்ரா, ஜி-20 தலைமை ஒருங்கிணைப்பாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா, சுற்றுலாத் துறை அமைச்சர் ஜி.கின் ரெட்டி மற்றும் பல்வேறு அமைச்சகங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் சுற்றுலாத் துறை ஜி – 20க்கான பூர்வாங்கத் திட்டமிடல் பற்றி விவாதித்தது. அதன் பிறகு ஜூன் 4 தேதியிட்ட கடிதங்கள் வெளியுறவு அமைச்சகத்திடம் இருந்து அனுப்பப்பட்டன.

# ரஷ்ய அதிபர் புடினுடன் மோடி தொலைபேசியில் உரையாடல்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று ரஷ்ய அதிபர் புடினுடன் தொலைபேசி மூலம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர்.

இருநாடுகளுக்கு இடையேயான வர்த்தகத்தை மேலும் ஊக்குவிப்பது குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் புடின் இந்தியா வந்த போது இரு நாடுகள் இடையே மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் நிறைவேற்றப்படுவது குறித்து இரு தலைவர்களும் விவாதித்தனர்.

வேளாண் பொருள்கள், உரம் மற்றும் மருந்து பொருள்கள் தொடர்பான – இருநாடுகளுக்கு இடையேயான – வர்த்தகத்தை மேலும் ஊக்குவிப்பது குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர் என இந்திய மத்திய அரசு தெரிவித்துள்ளது.



சர்வதேச எரிசக்தி தேவை மற்றும் உணவு சந்தைகளின் நிலைமை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச விவகாரங்கள் குறித்தும் இரு தலைவர்களும் விவாதித்தனர். மேலும் பல்வேறு சர்வதேச மற்றும் இருதரப்பு விவகாரங்கள் குறித்து அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தவும் இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

உக்ரைனின் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் தீர்வு காண வேண்டும் என்ற இந்தியாவின் நீண்டகால நிலைப்பாட்டை பிரதமர் மோடி அப்போது புட்னிடம் வலியுறுத்தினார் என மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

# பாடசாலைகள், வாழிடங்களின் தர நிலை இந்தியாவில் கணிசமானளவுக்கு மேம்பாடு

பல சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் மூலம் அரசாங்கத்தின் இலக்கு முயற்சிகளால் – குறிப்பாக நீர் இருப்பு வசதிகள் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் – இந்தியாவின் கல்வி மற்றும் குடும்ப நிலைமைகள் மேம்பட்டுள்ளன.

'இந்தியாவில் சமத்துவமின்மை நிலை பற்றிய அறிக்கை' இந்த உண்மையை வெளிப்படுத்தியுள்ளது.

'இந்தியாவில் சமத்துவமின்மை நிலை' அறிக்கையை, பிரதமருக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவின்தலைவர்டாக்டர்பிபேக்டெப்ராய்வெளியிட்டார். அதில் சுகாதாரம் மற்றும் கல்வி, வீட்டு நிலைமைகள் மற்றும்தொழிலாளர் சந்தை ஆகிய துறைகளில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் பற்றிய தகவல்கள் தொகுக்கப்பட்டன.

போட்டித்தன்மைக்கான நிறுவனத்தால் தகவல் திரட்டப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையானது இந்தியாவில் உள்ள சமத்துவமின்மையின் ஆழம் மற்றும் தன்மை பற்றிய முழுமையான பகுப்பாய்வை முன்வைக்கிறது என்று 'சவுதி கெஜட்' தெரிவித்துள்ளது.

"சமத்துவமின்மை என்பது ஓர் உணர்ச்சிப் பிரச்சினையாகும். இது ஒரு அனுபவப் பிரச்சினையும் கூட. ஏனெனில் இதனைக் கணக்கெடுக்க வரையறை மற்றும் அளவீடு இரண்டும் பயன்படுத்தப்படும். அளவீடு மற்றும் அதன் காலவரிசை உட்பட கிடைக்கும் தரவு ஆகியவ அதற்கான காலநேரத்தில் தொடர்ந்தும் தங்கியுள்ள்ளன." – டாக்டர் டெப்ராய் கூறினார்.



"வறுமையைக் குறைப்பதற்கும் வேலைவாய்ப்பை மேம்படுத்துவதற்கும் அவசியமானவற்றை வழங்குவதன் மூலம் மே 2014 முதல், அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. கொவிட் – 19 தொற்றுநோயின் அதிர்ச்சியை இந்தியா சிறப்பாகத் தாங்குவதற்கு இந்த நடவடிக்கைகள் பெரிதும் உதவின்" என்று அவர் மேலும் கூறினார்.

2019 – 20 ஆம் ஆண்டிற்குள், 95 சதவீத பள்ளிகளில் பள்ளி வளாகத்தில் செயல்படக்கூடிய கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு விட்டன. அவற்றில் 96.9 சதவீதமானவை பெண்களுக்கான தனியான செயல்பாட்டு கழிப்பறைகளைக் கொண்டுள்ளன என்று அந்த அறிக்கை குறிப்பிடுவதாக சவுதி வெளியீடு கூறியது.

கோவா, சண்டிகர், டெல்லி, தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ, லட்சத்தீவு, புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்கள் மற்றும் தமிழ்நாட்டில் செயல்பாட்டு மின்சார இணைப்புகளின் உலகளாவிய தரம் முழுமையாக – 100 சதவீதம் கவரேஜை எட்டியுள்ளது.

2018 – 19 மற்றும் 2019 – 20 க்கு இடையில் முதன்மை, மேல்நிலை, இரண்டாம் நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மொத்த சேர்க்கை விகிதம் அதிகரித்துள்ளதாகவும் சவுதி வெளியீடு சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய குடும்பம் மற்றும் சுகாதார கணக்கெடுப்பு 2019 – 2021 இன் படி, 97 சதவீத வீடுகளுக்கு மின்சார வசதியும், 70 சதவீத வீடுகளுக்கு மேம்பட்ட சுகாதார வசதியும், 96 சதவீதத்திற்கு பாதுகாப்பான குடிதண்ணீர் வசதியும் உள்ளன.

இந்த அறிக்கையில் வெளிவரும் சமத்துவமின்மை பற்றிய தகவல்கள், சீர்திருத்த உத்திகள், சமூக முன்னேற்றத்திற்கான சாலை வரைபடம் மற்றும் பகிரப்பட்ட செழுமை ஆகியவற்றை உருவாக்க உதவும்.

வகுப்புத் தகவல்களை வழங்கும் வருமான அடுக்குகளை உருவாக்குதல், உலகளாவிய அடிப்படை வருமானத்தை நிறுவுதல், வேலைகளை உருவாக்குதல், குறிப்பாக உயர் கல்வியில் உள்ளவர்களிடையே, சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுக்கான பட்ஜெட்டை அதிகரிப்பது போன்ற பரிந்துரைகள் இதில் செய்யப்பட்டுள்ளன.

**(மூலம்: ஏ.என்.ஐ.)**

# திருக்கேதீஸ்வரம் போன்று திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசு திருப்பணிகளைசெய்து காக்கவேண்டும்!

## பாரதப் பிரதமரிடம் கலாநிதி ஆறு.திருமுருகன் கோரிக்கை





திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புப் பணிபோல் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து திருப்பணிகளை நிறைவேற்றிக் காக்கவேண்டும் என இந்துமாமன்ற உப தலைவரும் சிவபூமி அறக்கட்டளை, துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவருமாகிய செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவரால் பாரதப் பிரதமருக்கு அனுப்பப்பட்டுள்ள கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கைத் வாழ் சைவமக்களின் பெருங்கோவில்களுள் ஒன்றாக விளங்குகின்ற திருக்கேதீச்சரத்தை இந்திய அரசாங்கம் சுமார் 35 கோடி ரூபா செலவில் கருங்கற் கோவிலாக அமைத்துச் சிறப்பித்துள்ளமை நன்றிக்குரிய விடயமாகும்.

கடந்த 09.03.2017 திருக்கேதீச்சர அறங்காவலர் சபை இலங்கை அரசாங்கத்தினூடாக இந்திய அரசோடு செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கமைவாக திருப்பணி வேலைகள் நடைபெற்று சிறந்த முறையில் ஆலய அர்த்தமண்டபம், மகாமண்டபம், கொடிஸ்தம்ப மண்டபம் முற்றாக கருங்கல்லால் கட்டப்பட்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது உலகம் முழுவதும் வாழும் சைவமக்களுக்குப் பெருமை தரும் விடயமாக உள்ளது.

இந்தத் திருப்பணி வேலைகள் தொடர்பாக பெரிதும் அக்கறை கொண்ட கொழும்பு இந்திய தூதுவராலயத்தின் 2017 முதல் இன்றுவரை பணியாற்றிய தூதுவர்களுக்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது அதை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு உதவிய அன்றைய தூதுவர் அசோக்காந்துக்கும் சைவ மக்கள் சார்பில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

வடக்கிலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் பணியாற்றிய உதவித் தூதுவர்கள் மகாலிங்கம், ஆ. நடராஜன், பாலச்சந்திரன் ஆகியோர் இந்தப் பாரிய திருப்பணி வேலைகளில் காட்டிய அக்கறை மறக்க முடியாதது.

சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சரத்தை புனரமைத்தமை போன்று சரித்திரப் பெருமை கொண்ட திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து நன்முறையில் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றித் தரவேண்டும்.

திருக்கோணேஸ்வர ஆலயத்தில் திருப்பணி வேலைகளைச் செய்வதில் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு தடுத்து வருவதை பலரும் அறிவர். திருக்கோணேஸ்வரர் ஆலய கோபுரத் திருப்பணி, அன்னதான மண்டபத் திருப்பணி, தேரோடும் வீதி அமைப்பு யாவும் பலவருடங்களாகத் தடைப்பட்டுப் போயுள்ளன.

இந்நாட்டின் மீது படையெடுத்த போர்த்துக்கேயரால் 1510 இல் கோணேஸ்வரர் கோவில் முற்றாக அழிக்கப்பட்டது. இன்றுவரை அந்த ஆலயம் முழுமையாகக் கட்டி முடிக்கவில்லை. இந்திய நாட்டுடன் மிக நெருங்கிய வரலாறு கொண்டது திருகோணமலை. இராமாயன காலத்து திருக்கோயில் என்பது யாவரும் அறிந்ததே. இந்திய பிரதமர் திருக்கோணேஸ்வர ஆலயத் திருப்பணியில் அக்கறை கொண்டு ஆலயத்தைப் புனர்நிர்மானம் செய்து உதவுமாறு இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் மிகுந்த நன்றியோடு வேண்டுகின்றோம். – என்றுள்ளது.

# மாஸ்டர் சிவலிங்கத்தின் சிலை மட்டக்களப்பில் திறந்து வைப்பு!



உலகப்புகழ்பெற்ற சிறுவர் கதைகூறும் கலைஞர் இலங்கையின் கதைமாமணி எனப்போற்றப்படும் மாஸ்டர் சிவலிங்கத்துக்கு வியாழக்கிழமை மட்டக்களப்பில் சிலை அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டது.

தமிழரின் அடையாளமாக, தமிழ் இலக்கியத்தின் முதுசமாக மிளிர்ந்தவர் சிவலிங்கம் மாமா.அவர் மட்டக்களப்பு மாநகரத்துக்குட்பட்ட மஞ்சந்தொடுவாயை பிறப்பிடமாகவும் கல்லடியை வசிப்பிடமாகவும் கொண்டவர்.

உலகங்கெங்கும் உள்ள தமிழ் சிறார்களை தனது கதைமூலம் ஈர்த்தவர். வில்லிசை வேந்தர், சொல்லிசைச் செல்வர், கதைமாமணி மாஸ்டர் என பல்வேறு கௌரவ பட்டங்களைப்பெற்றவர். சிறுவர்களுக்கு வித்தியாசமான முறையில் எங்கும் யாரிடமும் இல்லாத கதைகூறும் ஆற்றல்கொண்டு கதைகளை கூறிவந்தவர். மட்டக்களப்பு மக்களால் அதிகளவில் நேசிக்கப்பட்ட ஒருவர் என்ற அடிப்படையில் இந்த சிலை மஞ்சந்தொடுவாயில் நிறுவப்பட்டுள்ளது.

சிவானந்தா தேசிய பாடசாலையில் 2001உயர்தரம் மற்றும் 1998 சாதாரண தரம் படித்த மாணவர்களின் பங்களிப்புடன் இந்த சிலை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மஞ்சந்தொடுவாய் வடக்கு அபிவிருத்திச் சங்கத்தின் அமுலாக்கத்தில் அந்தச் சங்கத்தின் தலைவரும் சிவானந்தா பழைய மாணவர் மன்ற சிரேஷ்ட பழைய மாணவருமான உருத்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன்பிரதமஅதிதியாகக்கலந்துகொண்டு சிலையைத் திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழகத்தின் சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் திருமதி கெனடி பாரதி உட்பட மாஸ்டர் சிவலிங்கத்தின் மனைவி மற்றும் மகன் டாக்டர் விவேக் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியில் மஞ்சந்தொடுவாய் தொழில்நுட்ப கல்லூரிக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாஸ்டர் சிவலிங்கத்தின் திருவுருவச்சிலை திறந்துவைக்கப்பட்டதுடன் மாஸ்டர் சிவலிங்கம் தொடர்பான நினைவுரைகளும் நடைபெற்றன.



# சாள்ஸ் நிர்மலநாதன் அமெரிக்கா பயணம்

வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை 35 ஆவது ஆண்டாக நடத்தும் 'மாபெரும் பேரவை தமிழ் விழாவில்' பங்கேற்பதற்காக வட அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் அழைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் வியாழக்கிழமை அமெரிக்கா பயணமானார்.

நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 4 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த பயணத்தில் அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுடனும் 'தமிழர் தரப்பு நிலைப்பாடு' தொடர்பாக கலந்துரையாட சந்திப்புக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு அமெரிக்க வாழ் தமிழ் அமைப்புகள் பலரோடும் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் மேற்படி நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** லண்டன் சென்றீர்களாமே, எப்படி இருக்கிறது லண்டன்?

**பதில் :-** கோடிக்கணக்காக செலவு செய்து நடத்தப்பட்ட மாநாட்டில் பெரும்பாலும் முதிர்ந்த முகங்களை மட்டுமே பார்க்க முடிந்தது.

* சிலர் பணம் வளர்ந்தும் மனம் வளராமல் இருக்கிறார்கள்.

* வேறு சிலர் மனம் வளர்ந்தும் பணம் வளராமல் இருக்கிறார்கள்.

* பலரிடமும் செல்வம் நிறைந்திருக்கிறது. சிந்தை சுருங்கியிருக்கிறது.

* பிரமுகர்களில் பலர், தம் வீட்டைத் தவிர வெளியில் எல்லாம் தமிழ் வளர்க்க முயல்கிறார்கள்.

* ஆங்கிலம் பேசினால் மட்டுமே அறிவாளியாகி விடலாம் எனும் கருத்து பலபேரிடம் இன்னும் இருக்கிறது.

* வெள்ளைக்காரர்களாய் மாறிவிடும் வேகத்தில், நம்மவரிடையே போட்டி நடக்கிறது.

* வீட்டில் தமிழ் பேசும் பிள்ளைகளையும் பெற்றோரையும் காணமுடியவில்லை.

* தாய்மார் தமிழ் பேச விரும்பாததால், பிள்ளைகள் தாய்மொழி பயிலத் தமிழ்ப் பள்ளிக்கூடம் செல்கிறார்கள்.

* கலைகள் அங்கு கௌரவ அடையாளங்களாய் மட்டுமே ஆகிவிட்டன.

* பக்தி நோக்கமில்லாமலே ஆலயங்கள் பரவி வருவதாய்த் தோன்றுகிறது.

* ஆலயங்களில் அந்தணர்கள், பணத்திற்கேற்பப் பூசை செய்கிறார்கள்.

* செல்வம் பெருகப் பெருக உறவுகள் சுருங்கி வருகின்றன.

* அங்கும், தமிழர்கள் தம்முள் ஒன்றுபட்டு இயங்கத் தயாராயில்லை.

* சூழ்நிலைக்கேற்பச் சுயமிழந்து தம்மை மாற்றிக் கொள்ள எல்லோரும் தயாராயிருக்கிறார்கள்.

* நம்மவர்கள் வெள்ளைக்காரனிடம் நிறைய வாங்குகிறார்கள். எதையும் கொடுப்பதாய்த் தெரியவில்லை.

* தமிழர்கள் தனித்தனியே வளர்ந்திருக்கிறார்கள். இனமாய் வளர்ந்ததாய்த் தெரியவில்லை.

* இன்னும் இரண்டு தலைமுறைகள் கடந்த பின்பு, அங்குள்ளவர்களுக்குத் தாய் மண்ணுடனான தொடர்பு நீடிக்குமா எனும் ஐயம் என்னுள் தொடர்ந்து வளர்கிறது.

*மற்றும்படிக்கு, பிரிந்தவரைக் காணும் போது அவர்கள் காட்டும் அன்புக்கு எந்தக் குறையுமில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியும் தன் வாயால் கெடும்.**

**2. கேள்வி:-** இன்றைய நிலையில் நம் நாட்டு மக்களுக்கு என்னசொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:-** வழுக்கும் நிலத்தில் நடக்கவேண்டி வந்துவிட்டால் முடிந்த அளவு நிதானம் காட்டி, ஒருவரோடு ஒருவர் கைகோத்து, உறுதியாய்க் காலை ஊன்றி நடக்க வேண்டும். இல்லையேல் விழுந்துவிடுவோம். இன்று நம் நாட்டு மக்களும் அப்படித்தான் இயங்கவேண்டும். வாழ்க்கையில் வழுக்கிவிழும் நிலைக்கு நம்மைக் கொண்டுவந்து விட்டுவிட்டார்கள். இந் நேரத்தில் இதற்கு யார் காரணம்? அவரை என்ன செய்யலாம்? என்றெல்லாம் கூக்குரல் இட்டுக் கொண்டிருக்காமல் மக்களும் அரசும் ஒன்றுபட்டு நிதானமாய் நடக்க முன்வர வேண்டும்.

உடனடியாக பின்வரும் விடயங்களை மக்கள் கடைப்பிடித்தால், ஓரளவேனும் நாம் தப்பலாம்.

* எரிபொருள் பிரச்சினைதான் இன்றுள்ள முதற் பிரச்சினை. இப் பிரச்சினையை எதிர்கொள்ள மக்கள் தங்களை உடன் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். வெறுமனே கூக்குரல் இடுவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. தனியாரின் சுயதேவை வாகனங்களுக்கு எரிபொருள் தருவதை நிறுத்திவிட்டுப் பொதுப் பயணங்களுக்கான வாகனங்களுக்கு மட்டும் மீதமாக இருக்கும் எரிபொருளைப் பயன்படுத்த வேண்டும்.

* யாழ்ப்பாணத்தில் பத்தாண்டுகளுக்கு மேலாக நம் தமிழ்மக்கள் எரிபொருள்கள் இல்லாமல் த்தான் வாழ்ந்தார்கள். கரண்டி அளவில் மண்ணெண் நெய்யைப் பயன்படுத்தி நம் தமிழ்ப் பிள்ளைகள் சோராமல் படித்து வெற்றிபெற்ற வரலாற்றைப் பேரின மக்களுக்கு யாரும் எடுத்துச் சொல்ல வேண்டும்.

* இதுவரை சும்மா கிடைத்த சிரட்டை, விறகு முதலியவற்றைக் குப்பையில் அள்ளிப் போட்டுக் கொண்டிருந்தவர்கள் இனிமேல் அவைதான் நமக்கான எரிபொருள் என உணர்ந்து அவற்றைப் பயன்படுத்த முயலவேண்டும்.

* பழைய ஆடம்பர வாழ்வை மறந்து ஏழ்மை வாழ்வுக்கு எல்லோரும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

* இந் நேரத்தில் இனரீதியாகவோ மதரீதியாகவோ பகை வளர்த்து ஒருவரையொருவர் பழிவாங்க எவரும் முயலக் கூடாது.

* மின்சாரம், குடிதண்ணீர் என்பவற்றின் பாவனையை முடிந்த அளவு பொதுமக்கள் தாங்களாகக் குறைத்துக் கொள்ள வேண்டும். இருளில் இருக்கும் போது ஒரு மின்குமிழே சூரியனாய்த் தெரிவதை உணர்ந்து மின்சாரம் இருக்கும் போதும் அதில் சிக்கனம் பேண வேண்டும்.

* பைப்பைத் திறந்து ஒரு பேணி கழுவ ஒரு வாளி தண்ணீரைப் பயன்படுத்தும் பழைய பழக்கத்தை உடன் நிறுத்த வேண்டும். பைப்பில் தண்ணீர் வந்தாலும் வாளியில் அதனைத் தேக்கிச் சிக்கனமாய்ப் பயன்படுத்தப் பழக வேண்டும்.

* தேவையற்ற ஆடம்பரப் பயணங்களைத் தவிர்க்க வேண்டும்.

* செல்வம் மிகுந்தவர்கள் தம்மால் முடிந்த அளவு ஏழைக் குடும்பங்களைத் தத்தெடுத்துப் பராமரிக்க வேண்டும்.

* அவசியம் இருந்தால் அன்றி இறக்குமதிப் பொருள்களைப் பாவிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

போர்க்காலத்தில் 'அது இல்லை, இது இல்லை' என்று குற்றம் சொல்லாமல் தமிழ் மக்கள் கிடைத்ததை வைத்து வாழ்ந்தார்கள். இப்போது நடப்பதும் 'வறுமைக்கும்' நாட்டுக்கும் இடையில் நடக்கும் ஒரு போர்க்களம்தான் என்பதை அனைத்து மக்களும் ஒன்றுபட்டு நினைக்க வேண்டும். ஒரு வீட்டினை வறுமை சூழ்ந்தால் அந்த வீட்டு உறுப்பினர் அனைவரும் தம்மை ஒடுக்கி அந்த வறுமையிலிருந்து மீண்டுவர முயற்சிப்பது போலவே, நாட்டை வறுமை சூழ்ந்தாலும் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டுத் தம்மை ஒடுக்கி இந்தப் பிரச்சினையிலிருந்து மீண்டுவர முயற்சித்தே ஆகவேண்டும்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'**

**3. கேள்வி:-** நாட்டின் இன்றைய நிலையை அறியாமல், நம் தமிழ்த் தலைவர்களில் சிலர் தமிழரின் பிரச்சினையைப் பற்றி மட்டும் இந் நேரத்தில் பொருத்தமில்லாமல் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தீர்களா?

**பதில்:-** அவர்களின் பேச்சை எப்படி எடுத்துக் கொள்வது என்று தெரியவில்லை? நாட்டின் இன்றைய நிலையை, தமது பதவி இருப்பை நிலைநிறுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாய் நினைந்து, அவர்கள் பேசும் பேச்சில் அறிவையோ, அனுபவத்தையோ காண முடியவில்லை. நாடு வீழ்கிறது என்றால், அதற்குள் வாழும் நாமும் வீழ்கிறோம் என்பதுதான் அர்த்தம். நடுக்கடலில் சென்றுகொண்டிருக்கும் கப்பல் புயல் தாக்கித் தாழத் தொடங்குகையில், அதில் அமர்ந்திருந்த பறவை தான்மட்டும் தப்பிவிடலாம் என நினைந்து மேலெழும்புமாம். பின்னர் புயலில் அகப்பட்டு உட்கார இடம் கிடைக்காமல், கப்பல் மூழ்கிய சிறிது நேரத்தில் தானும் தண்ணீரில் மூழ்கி உயிரிழக்குமாம். அந்தப் பறவையின் நிலையில்தான் இன்று தமிழர்களாகிய நாமும் இருக்கிறோம். வீம்புப் பேச்சுக்கு இப்போது இடம் இல்லை. பந்தியில் சோறு முடிந்தது தெரியாமல் தனக்குப் போட்ட இலை ஓட்டை என்று ஒருவன் சண்டை பிடித்தானாம். நம் சில தலைவர்களின் பேச்சைக் கேட்க இந்தக் கதை தான் ஞாபகத்திற்கு வருகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * விழுந்த மாட்டுக்குக் குறிசுட நினைக்கினம்.**

**5. கேள்வி:-** திருக்கேதீஸ்வரக் கும்பாபிஷேகத்திற்குப் போகப் போகிறீர்களா?

**பதில் :-** விருப்பம் மனம் நிறைய இருக்கிறது. போகும் வழிதான் தெரியவில்லை. நாளுக்குநாள் எரிபொருள் தட்டுப்பாடு அதிகரித்துக் கொண்டே போகிறது. அதனால் வாகனச் செலவு தினம்தினம் ஏறிக்கொண்டே இருக்கிறது. யாழ்ப்பாணம் போய்வர தனி வாகனம் ஒன்றிற்கு ஒன்றரை லட்சம் ரூபா வரை கேட்கிறார்களாம். சாதாரணர்களுக்கு இது எப்படிக் கட்டுப்படியாகும்? கேதீச்சரத்தான் நம்மை சோதிக்கின்றான் போல. புத்தி அங்கு போவதற்கு வழி தேடியபடியே இருக்கிறது. முடியாவிட்டால் ராமேஸ்வரத்தில் இருந்து மனதால் கேதீச்சரநாதனை வழிபட்ட சம்பந்தர், சுந்தரரின் வழியைப் பின்பற்ற வேண்டியதுதான். முடிவு எதுவானாலும் அதுவே 'திருவருள் சம்மதம்' எனக் கொள்வதுதான் ஒரே வழி.

**உலகநாதரின் ஒப்பீனியன் * வாரிதியாரும் 'பம்மாத்துத்' தொடங்கிற்றார் போல. இவையளுக்கெல்லாம் திருவருள் சம்மதம் 'ஈமெயிலிலா' வந்தது? தங்கட விருப்பங்களைத் திருவருள் சம்மதம் ஆக்க வேண்டியதுதான். திருவருள் வந்து தன் சம்மதத்தைச் சொல்லவாபோகிறது? என்ற துணிவு இவர்களுக்கு.**

**5. கேள்வி:-** தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்குக் கப்பல் விடப் போகிறார்களாமே?

**பதில் :-** இப்படி எத்தனையோ தரம் சொல்லி ஏமாற்றி விட்டார்கள். இந்தியாவின் கரங்கள் கப்பலின் வழியாக வடக்கைப் பற்றிவிடுமோ எனும் இலங்கை அரசின் அச்சம்தான், இதுநாள்வரை வாயாலேயே கப்பல் ஓட வைத்துக் கொண்டிருந்தது. இப்போது பற்றிநிமிரக் கரங்கள் ஏதும் கிடைக்காதா? என்ற நிலையில் மூழ்கிக் கொண்டிருக்கும் இலங்கை, இந்தியா நீட்டுகிற கரங்களைத் தட்டிவிட முடியாத கட்டாயத்தில் தத்தளித்து நிற்கிறது. இலங்கையின் இந்த இக்கட்டைப் புரிந்துகொண்டு, காலம் அறிந்து இந்தியா கப்பல் விடப்பார்க்கிறது. இந்த விடயத்தில் இலங்கைக்கு இந்தியா வைத்திருக்கும் 'செக்கிலிருந்து' தப்ப வழி இருப்பதாய்த் தெரியவில்லை. வேறு வழியில்லாமல் இந்தியாவின் கோரிக்கைக்குத் தலையாட்ட வேண்டிய நிலையில்த்தான் நம்நாடு இன்று இருக்கிறது. அதனால் இதுவரை வார்த்தைகளில் ஓடிக்கொண்டிருந்த கப்பல் இனி தண்ணீரில் ஓடினாலும் ஓடலாம்.

**உலகநாதரின் ஒப்பீனியன் * 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகில்லை என்ற புலவர் பொன்மொழி பொய்மொழி அன்று காண்'**

# கப்பல்துறை கிராம மக்களின் காணிகளை அபகரிக்க துறைமுக அதிகார சபை முயற்சி




(ஹஸ்பர் ஏ ஹலீம்)

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமமே கப்பல்துறை கிராமம். கண்டி – திருகோணமலை பிரதான வீதியில் இருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தொலைவில் இந்தக் கிராமம் அமைந்துள்ளது.

மக்களின் அன்றாட ஜீவனோபாய தொழிலாக கூலித் தொழில், மழையை நம்பிய விவசாயம், வீட்டுத் தோட்ட பயிர்ச் செய்கையே சிறந்து விளங்குகின்றது. ஆனாலும் ஆரம்ப காலம் தொட்டு வாழ்ந்து வந்த இந்தக் கிராம மக்களின் பூர்வீகத்தை தற்போது துறை முக அதிகார சபைக்கு சொந்தமான காணி எனக்கூறி குடியிருப்புக்களை விட்டு வெளியேறுமாறும் கூறி வரும் துறைமுக அதிகார சபையினரின் எச்சரிக்கையால் அந்தக் கிராம மக்கள் அதிருப்திக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

சுமார் 500 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் குடும்பங்கள் என குடிசைகள் தகரக் கொட்டில்கள், கல் வீடு என வாழ்ந்து வந்தாலும் மக்களின் தற்போதைய நிலையை வைத்து துறைமுக அதிகார சபை காணிகளை அடாத்தாக அபகரிக்க முடிவதை ஏற்றுக் கொள்ள முடியாது. சிறுபான்மை சமூகம் எங்கிருக்கிறதோ அங்கெல்லாம் இந்த அரச காணி என்ற போர்வையிலும், தொல்பொருள் என்ற போர்வையிலும் தனியார் மக்களுடைய காணிகளை அபகரிக்க முற்படுகின்றனர். திருகோணமலை மாவட்டத்தை பொறுத்தமட்டிலும் இவ்வாறான நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் குடியிருப்பு காணிகளை விட்டு வெளியேறாவிட்டால் வீட்டை இயந்திரத்தை கொண்டு இடித்து தள்ளுவோம் என்ற வசனத்தை கூட துறைமுக அதிகார சபை ஊழியர்கள் அங்கு சென்று அந்த மக்களை பதற்ற நிலைக்கு தள்ளியுள்ளனர். இதனால் அப் பகுதியில் ஆர்ப்பாட்டம் ஒன்றை 05.06.2022 அந்தக் கிராம மக்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதில் கலந்து கொண்ட முதியோர் ஒருவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். சுமார் ஐம்பது வருட காலம் தொட்டு குடியிருந்து வந்த மக்களுக்கு சொந்தமான காணியை துறைமுக அதிகார சபையினர் வந்து தாங்கள் வசிக்கும் குடியிருப்பு காணியை விட்டு எழும்புமாறு பல முறை இங்கு வந்து எச்சரித்து விட்டுச் சென்றனர்.

1994 ஆம் ஆண்டு காலப் பகுதியில் முன்னாள் ஜனாதிபதியாக இருந்த சந்திரிக்கா அம்மையார் காலத்தில் அப்போதைய கப்பல் துறை ,புனர்வாழ்வு அமைச்சராக இருந்த மறைந்த மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப்பால் மேற்படி கிராமத்தில் மக்கள் மீள் குடியேற்றப்பட்டார்கள். தற்போது துறைமுக அதிகார சபையினர் பலவந்தமாக காணிக்குள் புகுந்து வெளியேறுமாறு மக்களிடத்தில் கூறுகின்றனர்.இந்த காணியை விட்டு வெளியேற முடியாது இதனை விட்டு வெளியேறி எங்கே செல்வது என மக்கள் தெரிவிக்கின்றனர். துறைமுக அதிகார சபையினர் அடாத்தாக அடிக்கடி தங்களது பகுதிக்குள் வந்து வெளியேறுமாறு கோருகின்றனர் இல்லாது போனால் வீட்டை உடைத்து தள்ளுவதாகவும் கூறுகின்றனர் சுமார் 17 வருடங்கள் தொடர்ந்தும் இந்த கிராமத்தில் வாழ்ந்து வருகிறோம் இதனை விட்டு வெளியேறி நாம் எங்கே செல்வது எனவும்  அப் பகுதி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

‘கிராம சேவகரின் அனுமதியின் பின்பே காணியில் வீடு அமைக்கப்பட்டு குடியிருக்கிறோம் தற்போது வீட்டை உடைத்து காணியை அபகரிக்க துறைமுக அதிகார சபையினர் அத்துமீறுவது சரியா? அரசாங்க அதிகாரிகளின் அறிவிப்புக்கு பின்னரே 17 வருடங்களாக வாழ்ந்து வருகிறோம். இப்போது காணியை விட்டு எழும்பச் சொன்னால் எங்கே போவது, எங்களுக்கு நீதி வேண்டும், இதுவும் ஒடுக்கு முறையால் எங்களது வயிற்றில் அடிப்பதே அரசின் நோக்கம் எனவும் பதாகைகளை ஏந்தியவாறும் காணியை அபகரிக்காதே அபகரிக்காதே என்ற கோஷங்களையும் இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் எழுப்பினர். சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டதுடன் துறைமுக அதிகார சபையினரின் இவ்வாறான அடாத்தான நடவடிக்கையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறும் நீதியை நிலை நாட்டுமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர்.



அரசாங்க அனுமதியின் போதே இந்தக் கிராம மக்கள் அன்றைய கால கட்டம் மாதிரிக் கிராமமாக குடியேற்றப்பட்டார்கள். பாடசாலை,தபாலகம்,கிராமிய வைத்தியசாலை என அரச கட்டிடங்கள் கூட இங்கு இருந்து சேவைகள் இடம் பெற்று வரும் நிலையில் துறைமுக அதிகார சபை காணிகளை சுற்றி எஸ்.எல்.பி.ஜி. என்ற வாசகம் அடங்கிய எல்லைக் கல் இட்டும் இந்தக் காணி துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானது அனுமதியின்றி உட்பிரவேசிக்க வேண்டாம்’ போன்ற வாசகங்களும் கொண்ட பதாகை இடப்பட்டுள்ளது அம் மக்கள் நீர் மின்சாரம் ஆரம்ப பதிவு என அந்தக் கிராமத்தில் உள்ள விலாசத்தை வைத்தே வாழ்ந்து வரும் நிலையில் இவ்வாறான காணி அபகரிப்பை மேற்கொள்வதை ஒரு போதும் ஏற்க முடியாது. பொருளாதார நெருக்கடிக்குள் நொந்து போயிற்று வாழ்ந்து வரும் இம் மக்களின் அன்றாட ஜீவனாம்சமே கேள்விக்குறியாகியுள்ள நிலையில் இவர்களை காப்பாற்றுவது அரசின் கடமையல்லவா? அதை விடுத்து அதிகாரத்தை அப்பாவி மக்கள் மீது சுமத்தி துறைமுக அதிகார சபையினர் அப்பகுதியில் நுழைந்து மக்களை எச்சரிக்கையூட்டுகின்றனர்.

‘2000 ஆம் ஆண்டுக்கு முன் மண் வீடு குடிசையில் வாழ்ந்து வந்த நிலையில் எனக்கு தனியார் மூலமாக வீடு கட்டி கொடுக்கப்பட்டது. ஆரம்பம் தொடக்கம் அந்த வீட்டில் வசித்தே திருமணம் முதல் பிள்ளைகளை பெற்று வாழ்ந்த நிலையில் இப்போது வெளியேறச் செல்கிறார்கள் மோட்டு வரி நீர் மின்சாரம் போன்ற பட்டியல் கட்டணம் செலுத்தி வருகிறேன் கல்லத்தனமாக குடியேறவில்லை. கிராம அதிகாரி மூலமாகவே குடியேறினேன். எனக்கு இந்த பூர்வீக குடியேற்றத்தை விட்டு வெளியேற முடியாது. பிரதமர் ஜனாதிபதி தீர்வினை தர வேண்டும் இல்லாது போனால் குடும்பத்துடன் மண்ணெண்ணெய் தீக்குளிப்பேன்’ என பாதிக்கப்பட்ட கிராமவாசி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறான சோகமான நிலைமைக்கு பாடசாலை செல்லும் மாணவர்கள் உட்பட குடும்பங்களை புறக்கணிப்பதை ஜீரணிக்க முடியாத ஒன்றாக விளங்குகிறது. அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகள் கண்டிக்கத்தக்கவை. மக்களை நிம்மதியாக வாழ்வதற்கு வழி செய்ய வேண்டும். அவர்களுக்கான உரிமைகளோடும் சுதந்திரத்தோடும் வாழ விழி சமைக்க வேண்டும். இப்படியான துறைமுக அதிகார சபையினரின் அடாவடித்தனக்கள் இனிமேலும் இடம்பெறாத வண்ணம் கப்பல் துறை கிராமம் இருக்க வேண்டும் என்பதை அம் மக்கள் விரும்புகின்றனர்.


இது மாத்திரமல்ல திருகோணமலை மாவட்டத்தில் வாழும் சிறுபான்மை சமூகத்தின் காணிகளை வேறு இடங்களிலும் இலங்கை சுற்றுலாத் துறை பணியகம், வனஜீவராசிகள் திணைக்களம் போன்றனவும் காணியை சுவீகரிப்புச் செய்துள்ளன. யுத்த சூழ்நிலையின் பின் மக்கள் நிம்மதியாக வாழ்ந்து வந்த நிலையில் சமூக நல்லிணக்கத்தை சீர்குழைக்கும்வண்ணம்செயற்படுகின்றனர்.

தொல்பொருள் என்கின்ற போர்வையிலும் காணி சுவீகரிப்பு இடம் பெறுகிறது. அப்பாவி மக்களின் காணிகளை இவ்வாறாக துறைமுக அதிகார சபை ஊழியர்களின் தொடர்ச்சியான அச்சுறுத்தல் மூலமாக நிம்மதியாக குடியிருப்பு பகுதியில் வாழ முடியாது எனவும் ஒரு கிழமைக்கு குறைந்தது இரு தடவையேனும் கிராமத்துக்குள் வருகை தருவதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிராம மக்களின் நிலை அறிந்து காணிகளை கையகப்படுத்தாதளவுக்கு அவர்களுடைய பூர்வீகமான இடங்களில் வாழ்வதற்கான வசதிகளை தொடர்ந்தும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை உரிய அரசாங்க தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அந்தக் கிராம மக்களின் ஒரேயொரு கோரிக்கையாகும்.

# உயிர்க் காப்பு நீச்சல் பயிற்சி நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



கிளிநொச்சி நீர்விளையாட்டு சங்கத்தின் ஏற்பாட்டில் உயிர் காப்பு நீச்சல் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சியில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் இடம் பெற்ற பயிற்சிகளின் பின்னர் அவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நீச்சல் தடாக அரங்கில் இடம்பெற்றது.

மேற்படி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சான்றிதழ்களையும், வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கி வைத்தார். இந்த நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன், தேசிய உயிர் காப்பு சம்மேளனம் தலைவர் அசங்க நாணயக்கார, விளையாட்டுத்துறை அமைச்சின் மாகாண இணைப்பாளர் கொஸ்ரா, மாவட்ட சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தேசிய உயிர் காப்பு சம்மேளனம் சார்பில் அரசாங்க அதிபருக்கு நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது. இதேவேளை, உயிர்காப்பு பயிற்சிகளில் ஒன்றான கராத்தே பயிற்சி பெற்றுவரும் மாணவர்களுக்குப் பாதுகாப்பு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# கடன் தந்தோருடன் பேச்சுத் தோற்றால் நாணய நிதியத்தினாலும் உதவ முடியாது

## ஹர்ஷ டி சில்வா எச்சரிக்கை

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகளில் ஊழியர் மட்ட இணைக்கப்பாட்டை எட்டினாலும், கடன் வழங்குநர்களுடனான பேச்சுகள் தோல்வியடைந்தால் கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

இலங்கைக்கு உதவ முடியாதவாறு சர்வதேச நாணய நிதியத்தின் கைகளும் கட்டப்பட்டுள்ளன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் நிறைவடையும் வரை நாட்டின் தற்போதைய தேவைகளை நிறைவு செய்வதற்காக குறுகிய கால வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

அடுத்த 4 மாதங்களுக்கு 400 கோடி டொலர் தேவைப்பாடு காணப்படுகிறது. அத்தோடு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, பிணைமுறி கடன்கள் உள்ளிட்டவற்றை செலுத்தாமலிருக்க முடியாது.

இதற்கு வெளிநாடுகளிடம் கடன் கோர முடியாது. எனவே நட்பு நாடுகளிடமே உதவி கோர வேண்டும். இந்த உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஆழமான பொருளாதார மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது அத்தியாவசியமானதாகும்.

அதற்கமைய வரி, செலவு, நிவாரணம், அரச நிதி, அரச நிறுவனங்கள், அரச சேவை, ஓய்வூதியம் உள்ளிட்ட கொள்கைகளில் ஆழமான மறுசீரமைப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறன்றி இந்த நெருக்கடிகளிலிருந்து மீள முடியாது.

இதற்கு முன்னர் 16 சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடியிருக்கின்றோம். அந்தச் சந்தர்ப்பங்களில் சர்வதேச நாணய நிதியத்துடன் மாத்திரமே பேச்சுகளில் ஈடுபட்டோம். ஆனால் இம்முறை மூன்றாம் தரப்பினருடனும் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

எமக்கு கடன் வழங்கியுள்ளவர்களே அந்த மூன்றாம் தரப்பினராவர். கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இவர்களிடம் பேச்சுகளை முன்னெடுப்பதற்காக சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இரு நிறுவனங்களின் அதிகாரிகள் நாட்டுக்கு வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் தற்போது பொருளாதாரம் தொடர்பான தரவுகளை மதிப்பாய்வு செய்யும் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டிய தரவுகளைக் கூட முழுமையாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுகிறது.



இதனை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த நாடாளுமன்ற அமர்வில் வெளிப் படுத்தியிருந்தார். இந்த மதிப்பாய்வுகள் நிறைவடைந்த பின்னரே மேற்படி நிறுவனங்கள் கடன் வழங்குநர்களுடனான பேச்சுகளை ஆரம்பிக்கும். எனவே சர்வதேச நாணய நிதியத்துடன் ஊழியர் மட்ட இணக்கப்பாட்டை எட்டினாலும், கடன் வழங்குநர்களுடனான பேச்சில் இணக்கப்பாடு எட்டப்படாவிட்டால், கடும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும்.

அரசாங்கம் ஆழமான பொருளாதார மறுசீரமைப்புக்கள் தொடர்பில் பின்பற்றவுள்ள கொள்கைகளின் அடிப்படையிலேயே கடன் வழங்குநர்களின் தீர்மானம் அமைந்துள்ளது. ஆழமான பொருளாதார மறுசீரமைப்புக்களை இந்த அரசாங்கத்தால் தனித்து மேற் கொள்ள முடியாது. எனவே தான் சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.

கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகாமல் இருக்கின்ற ஒவ்வொரு நிமிடமும் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதிகரிக்கவே செய்யும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்பட்ட போதே நாட்டைகட கட்டியெழுப்ப முடியாமல்போன இந்த அரசாங்கத்துக்கு, தற்போது எவ்வாறு அதனை செய்ய முடியும்? இப்போது சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் என்பது கோரிக்கை அல்ல. அது அத்தியாவசிய தேவையாகியுள்ளது. இதற்கு வழிவிட்டு கோட்டாபய ராஜபக்ஷ உடன் பதவி விலக வேண்டும். – என்றார்.

# தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது ஒன்ராரியோ உயர் நீதிமன்றம்!

கனடாவின் ஒன்றாரியோ மாகாண நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட 104 ஆம் இலக்க தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டமூலத்துக்கு அனுமதி வழங்கியிருக்கும் ஒன்றாரியோ உயர்நீதிமன்றம், இது உலகமகாயுத்தம் மற்றும் ஏனைய சர்வதேச மட்டத்திலான போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையிலான மாகாணக்கல்விக்கொள்கையை ஒத்தது என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

கனடாவின் ஒன்றாரியோ மாகாண நாடாளுமன்றத்தில் 104 ஆம் இலக்க தமிழினப்படுகொலை கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் அறிவூட்டல் வாரச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தச் சட்டமூலத்தின் பிரகாரம் மேமாதம் 12 – 18 ஆம் திகதி வரையான ஒருவாரகாலம் ஒன்றாரியோ மாகாணத்தில் தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரமாகப் பிரகடனப்படுத்தப்படும். தமிழினப்படுகொலை தொடர்பிலும் உலகில் இடம்பெற்ற ஏனைய படுகொலைகள் தொடர்பிலும் ஒன்றாரியோ மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் அந்த ஒருவாரகாலத்தில் அறிந்துகொள்வதை ஊக்குவிக்கும் நோக்கிலேயே அந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்தச் சட்டமூலம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அதிருப்தி வெளியிட்டிருந்த நிலையில், அண்மையில் கனடாவைத் தளமாகக்கொண்டியங்கும் மூன்று புலம்பெயர் அமைப்புக்கள் அதனை நீக்கவேண்டுமெனக்கோரி ஒன்றாரியோ உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தன.

அந்த அமைப்புகளில் ஒன்றான இலங்கை கனேடிய செயற்பாட்டுக் கூட்டிணைவு என்ற அமைப்பு, தமிழினப்படுகொலை அறிவூட்டல் வாரச்சட்டம் அரசமைப்பிற்கு முரணானது என்றும் ‘தமிழனப்படுகொலை’ என்ற விடயம் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான புலம்பெயர் தமிழர்களால் எவ்வித ஆதாரங்களுமின்றி உருவாக்கப்பட்ட தவறான கருத்தியலாகும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியில் அறிவூட்டல் மற்றும் நினைவுகூரல் ஆகிய நோக்கங்களுக்காக தமிழினப்படுகொலையை அங்கீகரித்து சட்டம் வகுப்பதற்கு அனுமதிவழங்கி ஒன்றாரியோ உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

அதுமாத்திரமன்றி இது உலகமகாயுத்தம் மற்றும் ஏனைய சர்வதேச மட்டத்திலான போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் வகையிலான மாகாணக்கல்விக்கொள்கையை ஒத்ததாகும் என்றும் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்தத் தீர்ப்பு தமிழ்மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்றும், மிகவும் வரவேற்கத்தக்க தீர்ப்பு என்றும் கனேடிய மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களும் புலம்பெயர் தமிழ்மக்களும் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அத்தியாவசிய உணவுப் பொருள் விநியோகம் அமைச்சர் பந்துலவுக்கு அங்கஜன் கடிதம்

யாழ். கொழும்புக்கிடையிலான அத்தியாவசிய உணவு, மருந்துபொருள் விநியோகத்துக்காக தற்போதைய நிலையில் மாற்று வழிகளை ஏற்பாடு செய்து தருமாறு யாழ்.வணிகர் கழக பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தனவிடம் அங்கஜன் இராமநாதன் கடிதம் மூலம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

அமைச்சருக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் – யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்தகர்கள் இதுவரை காலமும் கொழும்பில் இருந்து யாழ்ப்பா ணத்துக்கும், யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக ஏராளமான லொறிகளைப் பயன்படுத்தினர். துரதிஷ்டவசமாக தற்போதைய பொருளாதார நெருக்கடியின் கீழ் எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளதால் யாழ்.மாவட்ட வர்த்தகர்கள் லொறிகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளனர். தற்போதைய நெருக்கடி நிலை மேலும் மோசமடைந்து, அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் கடும் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர். யாழ்.மாவட்டத்தில் உள்ள வர்த்த கர்களுக்கு போக்குவரத்துக்காக சுமார் பத்து அல்லது பன்னிரெண்டு ரயில்கள் தேவைப்படுவதால் அதற்கான செலவை அவர்கள் செலுத்தத் தயாராக உள்ளனர். எனவே இந்தப் பிரச்சினையின் அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசியப் பொருள்களை ரயில் மூலம் சலுகை விலையில் கொண்டு செல்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்யுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்றுள்ளது.

# எரிபொருள் நெருக்கடி காரணமாக திண்மக் கழிவகற்றல் நெருக்கடியில்!

## யாழ்.மாநகர சுகாதாரக்குழு தலைவர் தெரிவிப்பு

எரிபொருள் நெருக்கடி காரணமாக யாழ்.மாநகர சபை முன்னெடுக்கின்ற திண்மக் கழிவு அகற்றல் செயற்பாடு நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதுடன் மக்களுக்கு அவசர கோரிக்கையொன்றையும் யாழ் மாநகர சபை சுகாதார குழு தலைவர் வ.பார்த்தீபன் விடுத்துள்ளார்.

திண்மக்கழிவு அகற்றல் செயற்பாடு நெருக்கடி நிலை தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது நாட்டில் ஏற்பட்டு இருக்கின்ற பொருளாதார நெருக்கடி என்பது மக்களைப் பாதிக்கின்ற அளவிற்கு யாழ்ப்பாண மாநகர சபையினுடைய செயற்பாடுகளையும் பாதித்திருக்கின்றது.

இதனால் யாழ்.மாநகரசபை முன்னெடுக்கின்ற திண்மக் கழிவகற்றல் செயற்பாடு மிகவும் சவாலான ஒன்றாக மாறியுள்ளது.

2021 ஆம் ஆண்டு ஜூன் மாதம் புதிய திண்மக் கழிவகற்றல் பொறிமுறை உருவாக்கப்பட்டது. இதற்கமைய யாழ்.மாநகரசபைக்கு உட்பட்ட 27 வட்டாரங்களுக்கும் ஓர் உழவு இயந்திரம் என்ற அடிப்படையில் வழங்கப்பட்டு கழிவகற்றப்பட்ட போதும், தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியால் 9 உழவு இயந்திரங்களே திண்மக் கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றன.

இது இடர்கால கழிவகற்றல் முகாமைத்துவத்தை உருவாக்கியுள்ளது. வாரத்துக்கு ஒரு முறையாவது ஒரு வீட்டுக்குச் செல்லவேண்டும் என்கிற மாநகர முதல்வரின் கோரிக்கைக்கேற்ப புதிய நேர அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எரிபொருள் நெருக்கடியால் திண்மக் கழிவகற்றலில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை மக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும்.

கழிவுகளை அகற்ற முடியாத நேரங்களில் யாழ்.மாநகர சபைக்குட்பட்ட 9 இடங்களில் மக்கள் கழிவுகளைத் தரம் பிரித்துக் கொண்டு ஒப்படைக்கின்ற இடங்களாக பிரகட னப்படுத்தி இருக்கின்றோம். ஏதோவொரு வகையில் தங்களுக்கு அருகில் உள்ள இதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் கழிவுகளைக் கொடுக்கமுடியும்.

இதனை சில நாள்களில் பத்திரிகை வாயிலாக பகிரங்கப்படுத்துவோம். காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செயற்படுத்தப் படவுள்ளன. எனவே இந்த இடர்கால கழிவகற்றல் முகாமைத்துவத்துக்காக மக்கள் பூரண ஒத்துழைப்பைத் தர வேண்டும். அத்துடன் இயலுமான அளவிற்கு கழிவுகளைக் குறையுங்கள்.

மேலும் எமது ஊழியர்கள் ’பணம் தந்தால் தான் கழிவகற்றுவோம்’ என அழுத்தம் கொடுத்தால் அதனை யாழ். மாநகரசபைக்கு அறிவித்தால் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அவ்வாறு பணம் வாங்கியவர்களுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட்டு தண்டிக்கப்படுவர்.

0716390000 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பொதுமக்கள் தொடர்புகொண்டு இவை தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-52

### கோலங்களின் யதார்த்தங்கள்

முன்னைய காலங்களில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, மலையகப் பகுதிகளில் இருந்து கிரமமாக தமிழ் மக்கள் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கச் செல்வது வழமை. கதிர்காமம் கிரி விகாரையாக – புனித பிரதேசமாக – உருவாகவும், இன முரண்பாடுகளின் தன்மைகளாலும் இப்படியான பாதயாத்திரைகள் குறைந்தன. இப்பொழுது ஒன்றோ, இரண்டு பாதயாத்திரை கோஷ்டிகள் புறப்படுகின்றன. யதார்த்தம் எதுவெனில் இந்தப் பாதயாத்திரை சாத்தியமானதுதான். அதேபோல ஐயப்ப சாமியின் மலைக்கு பாதயாத்திரை போவோரும், திருப்பதி ஏழுமலையானை பாதயாத் திரையில் சென்று தரிசிப்போரும் உளர். இவையுயும் யதார்த்தங்களில் சாத்தியமானவையே.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும், திம்புவில் செய்யப்பட்ட வெளிப்பாடுகளுக்கு பின்னரும், எதுவித கரிசனையும் இல்லாமல், தமிழ் மக்களின் சார்பில் விடுதலை புலிகள் தாங்கள் இமயமலையின் குளிர்படிந்த சிகரத்துக்குப் பாதயாத்திரையில் போய், இந்தியாவையும் வென்று, டென்சிங் போல் தமிழ்க் கொடியை அங்கு நாட்டுவோம் என்று யதார்த்தத்திற்கு புறம்பாக கிளம்பி, இன்றி அவர்களை இந்த நிலையில் – ஆனால் சிலர் கூறுவது போல ஐ.நாவின் மத்தியில் – விட்டுப் போயிருக்கிறார்கள்.

எங்கே விட்டுச் சென்றாலும் மக்கள் அரசியல், வாழ்வாதார, பொருளாதார வழிகளில் பெற்றிருக்கும் சீர்கேடுகள் அளவு கடந்தவை. அங்கே இருந்து எப்படியாவது நீந்திக் கரை சேர்வார்களா என்பது சொல்லப்படுவதில்லை.

இருந்து ஆயுதமற்ற வழிக்குத் திரும்பி, சமயோசிதமாக சுயநிர்ணயத்தின் மூலம் சுதந்திரத்திற்கு இட்டுச் சென்ற கிழக்கு திமோர், போகன்வில் போன்றவற்றின் சரித்திரங்கள் இதனைப் பறைசாற்றுகின்றன. விடுதலைப் புலிகள் அந்தப் பாதையைத் தேர்ந்தெடுக்கவில்லை. இந்தியாவுக்கு எதிராக தங்களை நிலைநிறுத்திக் கொள்ள ஆயுத பலங்களையே நம்பி இருந்தார்கள். நோர்வேயின் அனுசரணையில் உருவான சமாதான பேச்சு காலங்களில் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, ஆயுதங்களின் பாவிப்பு தற்பாதுகாப்புக்கு மட்டுமே எனக் குறைக்கப்பட்டு இருந்தாலும், மஹிந்த ஒட்டுக் குழுக்களின் உதவியோடு அதனை விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பாவித்து முழுமூச்சாக போருக்கும் முள்ளிவாய்க்காலுக்கும் வழி வகுத்தார்.



இவ்வளவு வேதனைகளுக்கும் அழிவுகளுக்கு பின்னரும் தமிழ் மக்கள் சிங்கள பெரும்பான்மையிடமிருந்து எதுவும் பெற்றுக்கொள்ளாமல் வெறும்கையுடன் நிற்கும் போது இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் இருப்பவற்றைத் தக்க வைத்துக் கொண்டு, அதிலிருந்து முன்னேற வேண்டும் என்ற உணர்வும் புத்திசாலித்தனமும் தமிழ் மக்களுக்கு வரவேண்டும். ஓரளவில் பார்த்தால் அதுதான் அவர்களது தஞ்சம் ஆகவும் தற்போதைய நிலைகளில் தெரிகிறது.

### ஆதங்கங்களில் தொடர்ந்து எழுகின்ற கேள்விகள்

இந்தத் தொடரைப் பற்றி சில கேள்விகள் என் முன் வைக்கப்பட்டன. அவற்றுக்கு முன்னரும் கருத்து கூறியிருந்தாலும், கேள்வி கேட்ட வாசகர்களை அவை ஆதங்கப்படுத்துவதாலும், எனது மனதையும் நெருடுவதாலும் அவற்றைப் பற்றித் திரும்ப இந்தப் பதிவுகளைத் தருகிறேன்.

முதலாவது – விடுதலைப்புலிகள் தமிழ் மக்களுக்காகத் தொடர்ந்து போராடியமை தவறு என்று கருதுகிறீர்களா? என்பது.

அதில் உள்ளடங்கிய இன்னொரு கேள்வியும் இருந்தது. அந்தப் போராட்டத்தை சர்வதேசத்தில் அவர்களின் புலம்பெயர் அமைப்புகள் மேற்கொள்வது பிழையா என்பது.

புலம்பெயர் அமைப்புகள் சர்வதேசத்திடம் நீதி கோரிப் போராடுவது பிழை அல்ல. அவர்கள் தம்முடைய இனத்திற்காக அவற்றைச் செய்ய வேண்டிய கடமையும், அதை எதிர்பார்க்கும் உரிமை நாட்டில் உள்ள மக்களுக்கும் உண்டு.

ஆனால் நோக்குகளில், வழிகளில் ஒற்றுமையின்மை, யதார்த்தமற்ற சமர்ப்பணங்கள் என்பவை முயற்சிகளை பிரயோசனமற்றவையாகவும் வீண் விரயங்களாகவும் ஆகின்றன. அவர்களது போராட்டம் ஒத்த நோக்குடன் அடம்பன் கொடி போல திரண்டு மிடுக்குடன் அமைய வேண்டும். போர்க்காலத்தில் நடந்து கொண்டிருந்த அட்டூழியங்களுக்கிடையிலும் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவரச் செய்ய ஐ.நாவினால் சர்வதேசத்தை இயக்க முடியவில்லை.

இன்று 13 வருடங்கள் கழித்தும் – எவ்வளவோ சமர்ப்பணங்களில் பின்னும் – ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கு பிறகும் – பிரித்தானியாவின் வெளிவிகார இணை அமைச்சர் விக்கி போர்டு இலங்கையில் தமிழ் சமூகத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னாள் நிறுத்துவதற்கு தேவையான பரிந்துரைக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையில் இருந்து தேவையான ஆதரவு கிடைக்காது என மதிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கிறார். இப்படி இருக்க, அந்த முயற்சியைத் தொடர்ந்து ஐக்கிய நாட்டின் அங்கத்துவ நாடுகளின் அரசாங்கங்கள் முன்னெடுக்கும் பட்சத்தில் அதனால், ஸ்ரீலங்காவை ஓர் அங்கத்தவ நாடாக அங்கு நடைபெற்ற மனித உரிமை மீறல்களுக்கும் இனப்படுகொலைகளுக்கும் பொறுப்புக் கூறலுக்கும் நல்லிணக்கத்திற்கும் கட்டுப்படுத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் என்று துணை அமைச்சர் மேலும் கூறியுள்ளார். ஆட்சிக்கட்டுகள் மாறினால் அரசுகள் வேறு நிலைப்பாடுகள் எடுக்கலாம். ஆனாலும் இந்த மதிப்பீடு பிரிட்டானியாவினது மட்டுமல்ல, மனித உரிமை மன்றில் ஸ்ரீலங்காவை ஒட்டி முக்கிய பங்கு வைக்கும் நாடுகளை – ஐரோப்பிய யூனியன், அமெரிக்காவின் நட்பு நாடுகள், எல்லாவற்றையும் – கலந்தாலோசித்த மதிப்பீடாகத்தான் கருத வேண்டும்.

ஆகவே புலம்பெயர் மக்கள் தாங்கள் இதுவரை நடத்திய போராட்டங்களின் பலாபலங்களுக்கான தாக்கங்களின் அடிப்படையில் இவற்றிலிருந்து விழிப்புணர்வு பெற்று, அக்கறைகளுடன் அழுத்தங்களுக்கு வழிமுறைகள் வகுக்க வேண்டும்.

விளங்கச் சொல்வதானால் இந்த மதிப்பீடு, மனித உரிமை மீறல் மற்றும் இனப்படுகொலை நடத்திய சூத்திரதாரிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்துவதற்கு ஐ.நாவின் பாதுகாப்பு சபையில் ஆதரவு இல்லை, அதற்கு அங்கு சீனா, ரஷ்யா போன்ற ஸ்ரீலங்காவின் நட்புறவு நாடுகள் தங்களது தடுப்பதிகாரத்தை பாவித்து அவற்றை முடக்கும், பாதுகாப்பு சபை இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுச்சபைக்கு பணித்தாலும் அங்குள்ள சர்வதேச புவியியல் நிலைகளால் பெரும்பான்மை பெறுவது சாத்தியமில்லை என்ற கணிப்பே.

ஆதலால் வேறுவித சட்ட ரீதியான மார்க்கங்களாக்தனிப்பட்ட வழக்குகளின் மூலமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் இவற்றை விசாரிக்க ஏற்றுக் கொண்டால்ச்ன்றி ஐ.நா. சபையினால் அங்கு அனுப்பப்படுவது நடப்பதாக தெரியவில்லை. இதில் தற்சமயத்துக்கு இந்த குற்றங்களின் சூத்திரதாரிகள் நிம்மதிப் பெரு விடக். கூடும். மனித உரிமை மன்று இவற்றுக்குத் கேட்கும் பொறுப்பு கூறலையும் நல்லிணக்கத்தையும் எப்படி இதுவரைத்தட்டிக்கழித்ததோ, அதுபோல நேச நாடுகளின் உதவிகளோடு தொடர்ந்து விடயத்தை கொல்லையில் போட சிறிலங்கா வழி தேடிக் கொண்டிருக்கும்.

ஒற்றுமையற்று, நோக்கங்களில் தீர்க்கதரிசனம் இல்லாமல், அங்கு ஓர் அமைப்பு தாங்கள் நினைத்த விதத்தில் ஒரு மின்னஞ்சலும், இன்னுமொரு அமைப்பு வேறொன்றும், சில வாண வேடிக்கைகளும், 'நாட்டை பிரிக்க ஐக்கிய நாடுகள் ஸ்ரீலங்காவுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டால் நாட்டிற்குரிய கடன்களை தமிழ் புலம்பெயர் சமூகம் அடைத்து விடும்' என்ற பீற்றல்களும் எதுவும் நடக்கப் போவதில்லை. தமிழ் மக்கள் நீதிக்காக தொடர்ந்தும் சர்வதேச அழுத்தங்கள் தந்து கொண்டே இருக்க வேண்டும். அவை தமிழ் மக்களை மையப்படுத்தியவையாகவும் யதார்த்தமானவையாகவும் அமைய வேண்டும்.

அப்படியல்லாது ஏட்டுச்சுரை காய்களில் கறி சமைக்க விளைவதும், தம் மிஷ்டபடி தங்கள் தங்கள் மேலாண்மைகளிலும் அகங்காரங்களிலும் எடுக்கப்படும் செயற்பாடுகளும் தமிழ் மக்களுக்கு எவ்வித விமோசனத்திற்கும் வழி வகுக்கப் போவதில்லை என்பதை இந்தப் புலம்பெயராளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.



சில தினங்களுக்கு முன்னர் கதிர்காம பாதயாத்திரைக் குழுவினருக்கு திருகோணமலை தோப்பூரில் நீராகரம் வழங்கி உபசரிக்கும் முஸ்லிம் இளைஞர்கள்.

அங்குதான் ஆயுதப் போராட்டங்களில் விடுதலையை முன்னெடுத்த மக்கள் குழுமங்கள் அவதானத்துக் குரியன வாகின்றன. ஒரு கட்டத்தில் சமாதானத் தீர்வை ஏற்று, அரசியல் தீர்வுகளுக்காக முன்னேறும்போது, வழமையாகவே யாவரும் ஆயுதங்களைப் படிப்படியாகக் களைந்து, சகஜ நிலைக்கு வந்துதான் முன்னேற வேண்டும் என்று எதிர்பார்ப்பு இருக்கும். விடுதலைப் போராட்டத்தில்


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=